பக்கங்கள்: பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00




சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | பங்குனி 19 வியாழக்கிழமை | (01-04-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 104

## அநாமதேய எச்சரிக்கை காரணமாக

# மட்டக்களப்பில் வாழ்ந்த வடபகுதி

# தமிழ் மக்கள் வெளியேறுகின்றனர்

(நமது நிருபர்)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் வசித்து வந்த வடபகுதியைச் சேர்ந்த தமிழ் மக்கள், பெரும் பரபரப்புக்கும் அச்சத்திற்கும் மத்தியில் அங்கிருந்து வெளியேறத் தொடங்கியுள்ளனர்.**

விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணா குழுவினரால் விடுக்கப்பட்டதாக கூறப்படும் எச்சரிக்கையை அடுத்தே மட்டக்களப்பில் வசிக்கும் வட பகுதி தமிழ் மக்கள் அவசர அவசரமாக அங்கிருந்து வெளியேறி வருகின்றனர்.

நாட்டின் 13வது பொதுத் தேர்தலுக்கு இன்னமும் 24 மணித்தியாலங்கள் இருக்கின்ற நிலையில் மட்டக்களப்பில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற இந் நிலைமை மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

பரபரப்பான தேர்தல் சூழலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கின்ற அச்சுறுத்தல்கள் படுகொலைகள் அங்கு பெரும் கிலேசத்தையும் பெரும் பீதியையும் உருவாக்கியுள்ளது.

இந் நிலையில் மட்டக்களப்பில் வசிக்கும் வட பகுதியைச் சேர்ந்த தமிழ் மக்கள் 24மணித்தியாலத்திற்குள் உடைமைகளை கைவிட்டுவிட்டு அங்கிருந்து வெளியேறி விட வேண்டும் என்று கடிதங்கள் மற்றும் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தகைய அச்சுறுத்தல்களுக்கு பயந்து அங்கு நீண்ட காலமாக வசித்து வந்த வட பகுதி தமிழ் மக்கள் உடுத்த உடுப்புடன் வடபகுதியை நோக்கி திரும்பிக் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அங்கு வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தவர்கள் தமது வர்த்தக நிலையங்களின் திறப்பை ஒப்படைத்துவிட்டு வெளியேற வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாகவும் வர்த்தகர் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

(10ம் பக்கம் பார்க்க)

## கருணாவின் அணியைச் சேர்ந்த நால்வர் கைது

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து விலக்கப்பட்ட கருணாவின் அணியைச் சேர்ந்த 4போராளிகளை மட்டக்களப்பு பொலிசார் கைது செய்துள்ளனர்.

மட்டக்களப்பு காத்தான் குடியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வைத்து இவர்கள் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பயணம் செய்த வாகனத்தை காத்தான் குடிப் பொலிசார் திடீரென வழிமறித்து சோதனை நடத்திய போதே ஆயு

(10ம் பக்கம் பார்க்க)

# கருணாவின் அறிவுறுத்தல்கள் எவற்றையும் பின்பற்ற வேண்டாம்

## விடுதலைப் புலிகளின் அரசியல்துறை மட்டு-அம்பாறை மக்களிடம் வேண்டுகோள்

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ள கருணாவின் அறிவுறுத்தல்கள் எவற்றையும் பின்பற்ற வேண்டாம். கருணா குழுவினரால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் தேச விரோதச் செயல்களாகப் பிரகடனப்படுத்தப்படுகிறது.

இவ்வாறு, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நேற்று உத்தியோக பூர்வ அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளது.

மட்டு-அம்பாறை மாவட்டங்களில் இருந்து வடபகுதி தமிழ் மக்களை வெளியேறுமாறு கருணா குழு விடுத்துள்ள அச்சுறுத்தலை அடுத்தே தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை மட்டு-அம்பாறை மாவட்ட மக்களிடம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது, அந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகத்தால் ஒழுக்காற்று நடவடிக்கையின் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட கருணா என்ற தனிநபர் தனது இருப்பினைத் தொடர்ந்து தக்கவைப்பதற்காக தொடர்ச்சியாக மட்டு-அம்பாறை விடுதலைப் புலிகள் என்ற பெயரில் பலவிதமான அறிக்கைகளை வெளியிடுவதோடு தனது தவறான நடத்தைக்கு ஆதரவளிக்க மறுக்கும் மக்களது சொத்துக்களை சூறையாடுதல் அச்சுறுத்தல் வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றுதல் போன்ற அராஜக நடவடிக்கைகளை தனது அடியாட்கள், மாற்றுக் குழுக்கள் தமிழ்த் தேசியத்துக்கு எதிரானவர்கள் ஆகியோரின் துணையுடன் மேற்கொண்டு வருகின்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து உத்தியோக பூர்வமாக வெளியேற்றப்பட்ட கருணாவினால் வெளியிடப்படும் அறிக்கைகள் துண்டுப்பிரசுரங்கள் அறிவித்தல்கள் ஆகியவற்றை தமிழீழ விடுதலைப் புலிகளின்

(10ம் பக்கம் பார்க்க)

## 50 தேர்தல் கண்காணிப்பாளர்கள் நேற்று யாழ்.வந்து சேர்ந்தனர்

(யாழ்ப்பாணம்)

பங்களாதேஷ்,நேபாளம்,கென்யா மற்றும் ஐரோப்பிய யூனியன ஆகியவற்றைச் சேர்ந்த தேர்தல் கண்காணிப்பாளர்கள் 50பேர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனா.

இவர்கள் யாழ் செயலகத்தில் வைத்து அரச அதிபர் செ.பத்மநாதன்,உதவித்தேர்தல் ஆணையாளர் செ.நடராசா ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடினர்.

தேர்தல் தொடர்பில் இற்றைவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக கேட்டறிந்த இவர்கள் கிளிநொச்சி மக்கள் வாக்களிப்பதற்கு செய்யப்பட்டுள்ள வசதிகள் பற்றியும் கேட்டறிந்தனர்.

(உ-19)

## கிழக்கு மாகாண நிலைமைகள் குறித்து

# கண்காணிப்புக் குழுத் தலைவருடன் நேற்று பிரதமர் ரணில் ஆலோசனை

(கொழும்பு)



பொதுத் தேர்தல் நெருங்கும் இவ் வேளையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கிழக்கு மாகாண நிலைமைகள் குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன் பியுறுஹெவ்டே, மற்றும் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான் பிரஸ்கர் ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

நேற்று முற்பகல் அலரி மாளிகையில் இச் சந்திப்பு இடம்பெற்றது.

கடந்த ஒரு வாரத்திற்குள் கிழக்கு மாகாணத்தில் தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் படுகொலைகள், துப்பாக்கிச் சூடுகள், அச்சுறுத்தல்கள் மிரட்டல்கள் என கட்டு மீறியிருக்கும் நிலையில், பிரதமர் இவ் விடயங்கள் குறித்து நோர்வேத் தூதுவருடனும், கண்காணிப்புக் குழுத்தலைவருடனும் விரிவாக ஆராய்ந்துள்ளார்.

பொதுத் தேர்தல் எவ்வித இடையூறும் இன்றி இடம்பெறும் வகையில் அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்படவேண்டியமை குறித்தும் இச் சந்திப்பில் ஆராயப்பட்டது.

(இ-5)

## அன்னை பூபதி நினைவுச் சதுக்கத்தில்

# ராஜன் சத்தியமூர்த்தியின் பூதவுடல் இன்று அடக்கம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழரசுக் கட்சி வேட்பாளர் ராஜன் சத்திய மூர்த்தி மற்றும் அவருடைய மைத்துனா கந்தையா கனக்சபை ஆகியோரின பூதவுடல்கள் இன்று மட்டக்களப்பில் அன்னைபூபதி நினைவாலய சதுக்கத்தில் நல்லடக்கம் செய்யப்படும் என்று அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று நண்பகல் வரை ராஜன் சத்தியமூர்த்தியின் இல்லத்தில் இரு பூதவுடல்களும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன. பிற்பகல் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிக்கு பூதவுடல்கள் எடுத்துச்செல்லப்பட்டன.

இன்று முற்பகல் பூதவுடல்கள் மீனகம்,தேனகம்,கொக்கட்டிச்சோலை ஆகிய இடங்களில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்னர் பூபதி நினைவாலய சதுக்கத்தில் அடக்கம் செய்யப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சுட்டுக்கொலை செய்யப்பட்ட ராஜன் சத்திய மூர்த்திக்கு புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணா 'மாமனிதர்' என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்துள்ளதாக தெரியவருகிறது.

(இ,5)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## இதழியல் கலை டிப்ளோமா கற்கைநெறி

ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, அறிவியல், பண்பாட்டு அமைப்பான யுனெஸ்கோவின் முன்னெடுப்பில், இதழியல் கலை டிப்ளோமா கற்கைநெறியை வழங்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முடிவு செய்துள்ளது. முழுநேரமாக இக் கற்கை நெறியில் இணைந்து பயில்பவர்கள் ஓராண்டிலும், பகுதி நேரமாக பயிலுபவர்கள் இரண்டாண்டிலும் இந்த டிப்ளோமாவைப் பூர்த்தி செய்ய இயலும். வகுப்புக்கள் ஜ*ம்மா மசூதி ஒழுங்கையில் நிறுவப்பட்டுள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் நடத்தப்படும். மே மாதத்தில் வகுப்புக்களைத் தொடங்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

## கட்டண விபரம்

| | | |
|---|---|---|
| பதிவுக் கட்டணம் | ரூபா | 500 |
| கற்கைநெறிக் கட்டணம் | ரூபா | 4000 |
| மீளப் பெறக்கூடிய வைப்பு | ரூபா | 1000 |

கற்கைநெறிக் கட்டணம் முழுமையாக அல்லது இரண்டு தவணைகளில் சமபங்குகளாக - ஒன்று பதிவு மேற் கொள்ளும் பொழுதும் மிகுதி இரண்டாவது பருவம் ஆரம்பிப்பதற்கு முன்பும் செலுத்தப்படல் வேண்டும்.

*பகுதி நேர டிப்ளோமா:* முழுநேரப் பத்திரிகையாளர்கள் எவரும் பகுதிநேர டிப்ளோமா கற்கை நெறியில் சேர்ந்து கற்கலாம். க.பொ.த.(சா/த) தேர்ச்சியுடன் ஓராண்டு இதழியல் துறை அனுபவம் அவசியம். தெரிவு திறமை அடிப்படையில் அமையும்.

*முழுநேர டிப்ளோமா:* க.பொ.த.(உ/த) தேர்ச்சியும் இதழியலில் அனுபவமும் உள்ள எவரும் விண்ணப்பிக் கலாம். தெரிவு திறமை அடிப்படையில் அமையும்.

விண்ணப்பப் படிவங்களை யாழ். பல்கலைக்கழகப் பரீட்சைகளும் அனுமதிகளுக்குமான உதவிப் பதிவாளர் பிரிவில் 50 ரூபா கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள் ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப் பங்கள் உதவிப் பதிவாளர், கலைப்பீடம், யாழ்ப்பா ணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கு 2004.04.30 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பிவைக்க வேண்டும்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

27.03.2004

(C/7477)

## வாக்காளர் அட்டைகளில் மொழி மோசடி

(கண்டி)

கண்டியில் வசிக்கும் சிங்கள மக்களுக்கு தமிழில் எழுதப்பட்ட வாக்காளர் அட்டைகளும் அங்கு வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு சிங்களத்தில் எழுதப் பட்ட வாக்காளர் அட்டைகளும் விநியோகிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கெங்கல்ல, அம்பாந்தோட்டை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கே இவ்வாறான வாக் காளர் அட்டைகள் வழங்கப்பட்ட தாகக் கூறப்படுகின்றது. (உ-10)

## பாவனைக்குதவாத அரிசி அழிப்பு

யாழ்ப்பாண நகரப்பகுதியில அமைந்துள்ள அரிசி ஆலை ஒன்றில், மனிதபாவனைக்குதவாதது என இனம்காணப்பட்ட 50 மூடை அரிசி குறிப்பிட்ட ஆலை உரிமையாளரின் அனுமதியுடன் அழிக்கப்பட்டது.

யாழ்..மாநகரசபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தலைமை யிலான குழுவினர் நேற்று முன் தினம் குறிப்பிட்ட ஆலைக்கு திடீர் பரிசோதனை மேற்கொண்டதன் பேரில்மேற்படி பாவனைக்கு தவாத 50 மூடை அரிசி கண்டு பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## பசாம் ஓதும் போட்டி

(குருநகர்)

குருநகர் புனித யாகப்பர் ஆல யத்தில் எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமை பசாம் ஓதும் போட்டி நடைபெறவுள்ளது.

குருநகர் பகுதியில் வாழ்ந்து வரும் மக்கள் கலந்து கொள்ள வுள்ள இப்போட்டியில், பங்குபற்ற விருப்பம் தெரிவித்த போட்டியா ளர்கள் அனைவருக்கும் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் இது தொடர்பான பயிற்சிப்பட்டறை ஒன்று நடத்தப்பட்டதும் தெரிந் ததே. (தி-121)

## எரிபொருள் நிரப்பு நிலையம் புனரமைப்பு

சாவகச்சேரி பல நோக்குக் கூட் டுறவுச்சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் எரிபொருள் நிரப்பு நிலை யம் இலங்கை பெற் றோலியக் கூட்டுத்தாபனத்தால் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளால் பலத்த சேதத் துக்கு உள்ளாகியுள்ள இவ் எரி பொருள் நிரப்பு நிலையம், சுமார் 50இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது. (தி-16)

# கேள்வி அறிவித்தல்

### வீடமைப்பு, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு கட்டிடங்கள் திணைக்களம்

01. யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கணனி அலகு கட்டடப் பகுதிக்கு அலுமினியக் கதவு, ஜன்னல் செய்து பொருத்துதல். இவ் வேலைக்கான சீலிடப்பட்ட கேள்விகள் , யாழ்ப்பாணம் கட்டிடத்தணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகக் கேள்விச் சபைத் தலைவரால் 2004.04.16 மு.ப. 10.00 மணிவரை கோரப்படு கின்றது.

02. கேள்விப்பத்திரங்கள் 2004.04.08 ஆம் திகதி பி.ப. 3.30 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விக்கட்டண மாக ரூபா ஐநூறு மட்டும் (ரூபா.500/-) செலுத்தி, யாழ்ப்பாணம், கடற்கரைவீதி, கட்டிடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

03. கேள்விகள் மூடப்பட்டவுடன் யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டிடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அலுவலகத்தில் உடன் திறக்கப்படும் கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதி நிதிகள் சமுகமளிக்கலாம்.

04. கடந்த 5 வருடங்களில் இதேமாதிரியான வேலை கள் செய்த முன்னைய அனுபவம் உள்ளவர் களுக்கு மட்டுமே கேள்விப்படிவங்கள் வழங்கப் படும். கேள்வி ஆவணங்களைப் பெறமுன் இதற்கான ஆவணச் சான்றுகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

05. பொறியிடப்பட்ட கேள்விகள் நேரில் அல்லது பதி வுத் தபால் மூலம் யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டி டங்கள் திணைக்களம் , மே/பா பிரதம பொறியிய லாளர் (யாழ்ப்பாணம்) கேள்விச் சபைத் தலைவருக்கு முடிவு நேரத்திற்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.

06. தாமதப் பிணைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என கேள்விதாரர் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

07. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிட லாம். அத்துடன் மேலதிக விபரங்களை யாழ்ப்பா ணம், கடற்கரை வீதி, கட்டிடங்கள் திணைக்கள பிரதமர் பொறியியலாளர் (யாழ்ப்பாணம்) அவர் களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**ந. தேவராஜன்,**
பிரதம பொறியியலாளர்,
கட்டிடங்கள் திணைக்களம்,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(C/7480)

# பாராளுமன்றப் பொதுத் தேர்தல்–2004. 04. 02

## வாக்களித்தலும் விருப்புத் தெரிவித்தலும் பற்றிய சுருக்கமான விளக்கம்

## வாக்குச்சீட்டின் மாதிரிப் படிவம்

| | | |
|---|---|---|
| ஷஷஅ' கட்சி | சின்னம் | |
| ஷஷஆ' கட்சி | சின்னம் | |
| ஷஷஇ' கட்சி | சின்னம் | |
| சுயேச்சைக் குழு 1 | சின்னம் | |
| சுயேச்சைக் குழு 2 | சின்னம் | |
| சுயேச்சைக் குழு 3 | சின்னம் | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

01. இது வாக்குச்சீட்டின் மாதிரியொன்று மட்டுமே.
02. அரசியற் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் பெயர்கள். அவைகளின் சின்னங்களுடன் மேற்பகுதியில் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு சின்னத்திற்கும் எதிரே வெற்றுக்கூடொன்று உள்ளது. இதில் ஏதேனும் ஒரு கூடொன்றில் உங்கள் வாக்கை அடையாள மிடலாம். வாக்களிக்கும் போது நீங்கள் விரும்பும் சின்னத்திற்கு எதிரே உள்ள வெற்றுக் கூட்டில் 'புள்ளடி' யிடல் வேண்டும்.
03. ஒவ்வொரு வேட்பாளருக்கும் பிரித்தொதுக்கப்பட்டுள்ள இலக்கங்கள் முறையே ஒருவரிசையில் பத்து என்றவாறு கீழ்ப் பகுதியில் காட்டப்பட்டுள்ளது. விருப்பொன்றை அடை யாளமிடும்போது. நீர் விரும்பும் வேட்பாளரின் இலக்கத்தின் மீது உங்களால் 'புள்ளடி' இடப்படல் வேண்டும். வேட்பாளர்கள் மூவருக்கு மேற்படாத எண்ணிக்கைக்கு அதாவது அவ்விலக் கங்கள மூன்றுக்கு மேற்படாத எண்ணிக்கை மீது உங்கள் விருப்பினை அடையாளமிட முடியும்.
04. வாக்கொன்று இல்லாத வாக்குச் சீட்டு செல்லுபடியற்றதாகும். அது எவ்வித பெறுமதியும் அற்றதோடு அல்லாமல் நிராகரிக்கவும்படும். ஆகையினால் முதலில் வாக்கை அடையாளமிட்டு. அதன்பின் விருப்பமாயின் விருப்பு வாக்குகளை அடையாளம் இடுவதே பொருத்தமானது. என்பதை தயவு கூர்ந்து நினைவிற் கொள்ளவும.

தேர்தல்கள் செயலகம்,
சரணமாவத்தை,
இராஜகிரிய.

**தயானந்த திசாநாயக்க,**
தேர்தல்கள் ஆணையாளர்.

# கண்ணான நாட்டைக் கட்டியெழுப்ப பொன்னான வாக்கைப் பயன்படுத்துவீர்

**நாளை நடைபெறவுள்ள 13 வது பொதுத் தேர்தலில், 4 இலட்சத்து 70 ஆயிரத்து 842 புதிய வாக்காளர்கள் உட்பட 1கோடியே 28 இலட்சத்து 99 ஆயிரத்து 32 வாக்காளர்கள் வாக்களிக்கும் தகுதிபெற்றுள்ளனர். நாடு முழுவதும் உள்ள 22 தேர்தல் மாவட்டங்களிலும் இருந்து 225 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான இந்தத் தேர்தலில் 24 அரசியல் கட்சிகள் 194 சுயேட்சைக்குழுக்கள் சார்பாக 5ஆயிரத்து 698 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.**

**வாக்களிப்புக்கு ஏதுவாக நாடு பூராக 11ஆயிரம் வாக்குப் பதிவு நிலையங்கள் அமைக்கப்படுவதுடன் ஆயிரத்து 200 நிலையங்களில் வாக்கு எண்ணும் நடவடிக்கை இடம்பெறவுள்ளது.**

**இத் தேர்தல் பணிகளுக்கான 1இலட்சத்து 50 ஆயிரம் அரச பணியாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர்.**

**இதேவேளை, யாழ். மாவட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (வீடு), ஈழ மக்கள் ஜன நாயகமுன்னணி (வீணை), ஐக்கிய சோசலிஸக் கட்சி (முச்சங்கர வண்டி), ஜாதிகஹெல உறுமய (சங்கு), புதிய இடதுசாரி முன்னணி (மேசை), றுகுணு ஜனா பக்ஷய (மோட்டார் கார்), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (மரம்), ஸ்வராஜ் (கோப்பை), சுயேட்சைக்குழு - 01( பூட்டு), சுயேட்சைக்குழு-02 (கூசா) ஆகிய எட்டு கட்சிகளும் 2 சுயேட்சைக்குழுக்களும் போட்டியிடுகின்றன.**

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 13வது நாடாளுமன்றத் தேர்தல் நாளை இடம்பெறவுள்ளது. இதில் வாக்குரிமை பெற்ற அனைவரும் வாக்களிப்பது அவர்களது உரிமையும் கடமையுமாகும். நாம் வழங்கும் ஒவ்வொரு வாக்குமே நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும். எனவே வாக்காளர்கள் அனைவரும் வாக்களிப்புத் தொடர்பாக போதிய அளவு தெளிவுடன் இருப்பது இன்றியமையாததொன்றாகும்.

எனவே வாக்களிக்க வேண்டிய முறைமைகள் பற்றி இங்கு சற்று ஆராய்வது பொருத்தமானது.

### வாக்காளர்களின் கடப்பாடு

பொதுவாக வாக்காளர்கள் ஒவ்வொருவரும் வாக்களிக்கும் போது இரண்டு விதமான வாக்குகளை அளிக்கவேண்டிய கடப்பாடு உள்ளவர்களாக இருக்கிறார்கள்.

1. தான் விரும்பும் கட்சி அல்லது சுயேட்சைக்குழுவுக்கு வாக்களித்தல்.

2. விருப்பு வாக்களித்தல் என்பனவாகும்.

இந்த இரு விடயங்களும் தான் மக்கள் மத்தியில் குழப்பத்தை உருவாக்குவதாகக் காணப்படுகின்றன.

அந்த வகையில் தான் விரும்பும் கட்சியினுடைய அல்லது சுயேட்சைக் குழுவினுடைய சின்னத்திற்கு எதிரே உள்ள கூட்டினுள் வாக்காளர்கள் புள்ளடியிட வேண்டும். பின்னர் வாக்காளர்களுக்கு வழங்கப்படும் விருப்புரிமை வாக்கு என்ற அடிப்படையில் ஒவ்வொருவரும் தாம் விரும்பும் கட்சியில் அல்லது சுயேட்சைக்குழுவில் மூன்று அபேட்சகர்களுக்கு மட்டுமே வாக்களிக்கவேண்டும்.

இந்த விருப்பு வாக்கு இலக்கமானது நாம் எந்தக் கட்சி அல்லது சுயேட்சைக்குழுவினது சின்னத்துக்கு நேரே புள்ளடியிடுகிறோமோ அந்தக் கட்சியைத் சேர்ந்த உறுப்பினர்கள் மூவருக்கு எமது வாக்கை பிரயோகிப்பதாக அமையும்.

### வாக்குசெல்லுபடியாகும் சந்தர்ப்பங்கள்

இந்த வாக்கெடுப்பில் வாக்காளர்களது வாக்களிப்பு எனக் கருதப்படுவது நாம் விரும்பும் அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக் குழுக்களுடைய சின்னத்திற்கு நேரே உள்ள கூட்டினுள் புள்ளடியிடுவது ஆகும். எனவே சின்னத்திற்கு நேரே புள்ளடியிட்டு விருப்பு இலக்கத்திற்கு புள்ளடியிடாது விட்டாலும் அந்த வாக்கு செல்லுபடியாகும். ஆனால், விருப்பு இலக்கங்களிற்கு புள்ளடியிட்டு சின்னங்களுள் ஒன்றிற்குப் புள்ளடியிடாது விட்டால் அந்த வாக்கு செல்லுபடியற்றதாகி விடும். அனைவரும் அவதானமாகச் செயற்படவேண்டும்.

அடுத்து வாக்காளர்களால் செய்யப்படும் வாக்களிப்புகள் செல்லுபடியற்றுப் போகக் கூடிய சந்தர்ப்பங்களை நோக்கும் போது,

வாக்காளர்கள் தாம் விரும்பும் சின்னத்திற்கு நேரேயுள்ள கூட்டிற்கு வெளியே புள்ளடி போடும் சகல சந்தர்ப்பங்களிலும் வாக்கு செல்லுபடியற்றதாகப் போய்விடும். அத்துடன் சின்னத்துக்கு புள்ளடியிடாது விருப்புரிமை இலக்கங்களுக்கு மட்டும் புள்ளடியிடும் போதும், ஒன்றிற்கு மேற்பட்ட தெரிவுச் சின்னங்களுக்கு வாக்களிக்கும் போதும், மூன்றிற்கு மேற்பட்ட விருப்பு இலக்கக் கூடுகளுள் வாக்களிக்கும் போது நாம் இடும் புள்ளடி குறிப்பிட்ட ஒரு சின்னத்துக்குரிய அல்லது இலக்கத்திற்குரிய கூட்டைவிட்டு வெளிவந்து இன்னுமொரு சின்னத்தின் அல்லது இலக்கத்தின் கூட்டையும் தொடும் போதும் புள்ளடி தவிர்ந்த ஏனைய குறியீடுகளை இட்டு எமது விருப்பைத் தெரிவிக்க முயலும் போதும் சொற்களில் எழுதி எமது ஆதரவைத் தெரிவிக்க முயலும் போதும் வாக்குகள் செல்லுபடியற்றுப் போய் விடுகின்றன.

இவற்றைக் கருத்தில் கொண்டு வாக்காளர்கள் தாம் விரும்பும் ஏதாவது ஒரு விருப்புச் சின்னத்திற்கும் அந்தச் சின்னத்தில் போட்டியிடுகின்ற மூன்று அபேட்சகர்களுக்கும் மட்டுமே வாக்களிக்கவேண்டும். அளிக்கும் வாக்குகளை புள்ளடிக் கோடுகளால் மட்டும், குறிப்பிடப்பட்ட கூட்டினுள் அடங்கக் கூடியவாறு இட்டால் மட்டுமே அவ்வாக்குகள் செல்லுபடியாகும்.



### வாக்குகள் வீணாகுவது ஏன்?

இதேபோல், வாக்காளர்கள் தமது வாக்குகளை வீணடிக்கக் கூடிய சந்தர்ப்பம் திருட்டுத்தனமாக வாக்குப் போடுவோரின் செயற்பாடுகளாலும் ஏற்படுகிறது. ஆதாவது வாக்குரிமை உடையவர் வாக்களிக்காது இருக்கும் போது அவரது வாக்கு இன்னொருவரால் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம் இதுவாகும். இவ்வாறு ஒருவர் தான் வாக்களிக்க முன்பே அவரது வாக்கு இன்னொருவரால் இடப்படும் போது வாக்கினை இழந்தவர் தான் வாக்களிக்கமுடியாது எனக் கருதுவது முற்றிலும் தவறு. இதற்கும் சந்தர்ப்பம் சட்டத்தினால் உருவாக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது.

அந்த அடிப்படையில் இப்படியான சந்தர்ப்பங்களால் பாதிக்கப்பட்டோர் உடனடியாகத் தனக்குரிய வாக்குச் சாவடிக்குச் சென்று அன்று கடமையில் இருக்கும் தேர்தல் அதிகாரியை நேரடியாகச் சந்தித்து தான் வாக்களிக்காத போதும் தனது வாக்குப் பிறிதொருவரால் பயன்படுத்தப்பட்டு விட்டது என்பதை உறுதிப்படுத்தும் போதும் அவர் தனக்குரிய வாக்களிப்பினைச் செய்வதற்கு உரிய அதிகாரிகளால் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.இதற்கும் சட்டத்தில் இடம் உண்டு.

இதேபோல் எழுத வாசிக்கத் தெரியாதவர்களும் கண் பார்வை குறைபாடு உடையவர்களும் வாக்குச் சாவடிகளில் கடமையில் இருக்கும் தேர்தல் அதிகாரிகளுடைய துணையுடன் விரும்பியவாறு தான் தெரிவினை வழங்கிக் கொள்ளவும் சட்ட ரீதியாகச் சந்தர்ப்பம் உண்டு. எனவே வாக்காளர்கள் தமது உரிமையை சரிவரப்பயன்படுத்த வேண்டும். இதேபோல் வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாத வாக்குரிமை பெற்றவர்களும் வாக்குச் சாவடிகளுக்குச் சென்று தன்னை அதிகாரிகளிடம் உறுதிப்படுத்திக் கொள்வதன் மூலம் வாக்குச் சீட்டினைப் பெற்று வாக்களிக்கலாம்.

### வாக்களிக்கும் தகுதியாருக்கு உண்டு

இனி வாக்களிக்கத் தகுதியுடைவர்கள் யார்? என்பது பற்றி நோக்குதல் அவசியமாகும். இலங்கையின் அரசியல் யாப்பின் பிரகாரம் இலங்கைப் பிரஜையாகவுள்ள 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் வாக்களிக்கலாம். புத்தி சுவாதீனம் உடையவர்களாகவும் நீதிமன்றத்தால் குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்டு சிறைத் தண்டனையை அனுபவிக்காதவர்களாகவும் குடியுரிமை பறிக்கப்படாதவர்களாகவும், குற்றங்களின் பேரில் நாடு கடந்தப்படாதவர்களாகவும் இருப்பவர்களே வாக்களிக்கத் தகுதிபெற்றவர்கள் ஆவார். எனவே இவ்விடயங்களை அனுசரித்து வாக்குரிமைபெற்ற அனைவரும் வாக்களிப்பு முறைகளை மிகக் கவனமாக அவதானித்து வாக்களிப்பதே செல்லுபடியான வாக்களிப்பாகக் கருதப்படும்.

### பா.உ.க்கள் தெரிவு

இது ஒரு புறம் இருக்க மக்களிடும் வாக்குகளை அப்படியாகக் கொண்டு, எவ்வாறு பாராளுமன்றப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுகின்றனர் என்பது பற்றியும் வாக்காளர்கள் அறிந்திருத்தல் அவசியம்.

இலங்கையின் அரசியல் யாப்புச் சட்டவிதிகளுக்கு அமைவாக நாட்டில் உள்ள 25 நிர்வாக மாவட்டங்களும் 22 தேர்தல் மாவட்டங்களாக வகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் இருந்து 225 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்வுள்ளனர்.

இவ் 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் மூன்று விதமாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

மாவட்ட ரீதியாகக் கிடைக்கும் வாக்குகளை அடிப்படையாகக் கொண்டு 160 பாராளுமன்ற உறுப்பினர்களும் மாகாண ரீதியாகக் கிடைக்கும் வாக்குகளை அடிப்படையாகக் கொண்டு 36 உறுப்பினர்களும் தேசியப் பட்டியல் ரீதியாக 29 பாராளுமன்ற உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுவர்.

அந்த வகையில் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் எத்தனை பாராளுமன்ற உறுப்பினர்கள் வருவர் என்பதை அவ்வவ் மாவட்டங்களில் உள்ள வாக்காளர்களுடைய எண்ணிக்கையை வைத்தே தேர்தல் ஆணையாளர் தீர்மானிப்பார். அத்துடன் எந்தக் கட்சி அல்லது எந்த சுயேட்சைக்குழுவில் இருந்து எந்தனை பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகுவர் என்பதை அவற்றுக்குக்கிடைக்கும் வாக்குகள் மற்றும் விருப்பு வாக்குகளின் வீதம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தேர்தல் ஆணையாளர் தீர்மானிப்பார்.

இந்தக் கணிப்பீட்டுக்குச் செல்வதற்கு அல்லது கணிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு ஒவ்வொரு கட்சிகளும் மாவட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கையில் 5வீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும். இது சட்ட ரீதியான ஓர் அம்சமாகும்.

### ஆட்சியைத்தீர்மானிக்கும் சக்தி நீங்களே

5 வீதத்திற்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்ற கட்சிகளின் வாக்குகள் திரட்டப்பட்டு அதில் அதிக வாக்குகளைப் பெறுவோர் அடிப்படையில் 29 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

இதைவிட ஒவ்வொரு மாவட்டத்திலும் மிகவும் அதிகூடிய ஆதரவு வாக்குகளைப் பெறும் கட்சிகளுக்கு போனஸ் பாராளுமன்ற ஆசனங்கள் கிடைக்கும் வாய்ப்புகள் உண்டு.

எனவே நாளை ஆட்சியை தீர்மானிப்பது வாக்குரிமை பெற்ற வாக்காளர்களது கையிலேயே உள்ளது. இதற்காகவே முக்கியமான தகமைகளை அடிப்படையாகக் கொண்டு வாக்காளர்களுக்கு தகுதி வழங்கப்பட்டுள்ளது. இதனால் எமக்குள்ள உரிமையை பிறிதொருவர் பயன்படுத்துவதன் மூலம் நாட்டின் எதிர்காலத்திற்குப் பங்கம் விளைவிக்கப்படுவதை நாம் தடுக்க முடியும்.

இதேபோல மாகாண ரீதியான தெரிவுகளும் ஒவ்வொரு மாகாணத்திலும் போட்டியிடும் அரசியல் அமைப்புக்களுக்குக் கிடைக்கும் மொத்த வாக்குகளின் விகிதாசார அடிப்படையில் தலா 4 பாராளுமன்ற உறுப்பினர்கள் 9 மாகாணங்களிலும் 36 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். மாகாணரீதியாகப் போட்டியிடும் கட்சிகள் பெறும் வாக்குகளின் எண்ணிக்கை அடிப்படையில் இத்தெரிவினை தேர்தல் ஆணையாளர் மேற்கொள்வர்.

### தேசியப்பட்டியல்

அடுத்து தேசியப் பட்டியல் ரீதியான தெரிவுகள் இலங்கை முழுவதையும் ஒரு தேர்தல் மாவட்டமாகக் கணிப்பீடு செய்து இங்கு போட்டியிடும் சகல கட்சிகளிலிருந்தும் இலங்கையின் மொத்த வாக்காளர் எண்ணிக்கையில் ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது எதிர் காலத்தை ஒளிமயமாக்க எதிர்வரும் தேர்தலை மக்கள் சரிவரப் பயன்படுத்துவது கட்டாயமானதொன்றாகும். எமது வாக்குரிமையைப் பறிப்பதற்கோ வாக்களிப்பைத் தடுப்பதற்கோ எவருக்கும் உரிமை இல்லை என்பதை மனதில் கொள்வோம்.

தொகுப்பு
க.பவன்

# யாழ்.மாவட்டத்தின் தற்போதைய நிலையில்

# நீதியான தேர்தலை நடத்துவது கடினம்

## தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான அமைப்பு

(கொழும்பு)

யாழ்.மாவட்டத்தில் தற்போது நிலவுகின்ற சூழ்நிலையில் நாளை இடம்பெறவிருக்கின்ற 13வது பொதுத் தேர்தலை நீதியானதும் நேர்மையானதுமாக நடாத்துவது என்பது சந்தேகமே என தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

பொதுத் தேர்தல் தொடர்பான கள நிலைவரங்களை நேரில் ஆராயும் வகையில் மேற்கொண்ட தமது கணகாணிப்புத் தொடர்பான கருத்துக்கள் அடங்கிய இடைக்கால அறிக்கையை வெளியிட்டுள்ள தேர்தல் வன்முறைக்களைக் கண்காணிப்பதற்கான அமைப்பு நேற்று இது தொடர்பில் கொழும்பில் பத்திரிகையாளர் சநதிப்பொன்றை நடாத்தியது.

அதில் கலந்துகொண்ட அமைப்பின் தலைவர் பாக்கியசோதி சரவணமுத்து மேற்படி கருத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

யாழ்ப்பாணத்தில் போட்டியிடுகின்ற கட்சிகள் பலவும் அச்சுறுத்தல்கள், பயமுறுத்தல்கள் மத்தியிலேயே தமது பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டதால், பிரசாரங்களின்போது அவை பல பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்திலும் இந்த நிலையே காணப்படுகின்றது.

தேர்தல் வன்முறைகள் தொடர்பாகக் கிடைத்த தகவல்களுக்கு அமைய பிர்தான ஒரு கட்சிக்கு எதிராக கூடுதலான குற்றுச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி., ஆனந்த சங்கரி தலைமையிலான சுயேட்சைக்குழு-01 என்பவற்றுக்கு மக்கள் அளிக்கினற வாக்குகள் பெறுமதி மிக்கவையாக அமைவதுடன், வடபகுதிக்கான தேர்தல் பெறுபேறுகள் மனப்பூர்வமான உண்மைக் கருத்தைப் பிரதிபலிப்பானவாக அமையும் என்று தெரிவித்துள்ளார்.

(உ)

## மட்டு. வேட்பாளர் கொலைக்கு

## ஜனாதிபதி சந்திரிகா கண்டனம


(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக் கட்சி வேட்பாளர் ராஜன் சததிய மூர்த்தியும் அவரது மைத்துனரும் படுகொலை செய்யப்பட்டமையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கண்டித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக வன்முறைகள் இடம்பெறுவதாக சுட்டிக்காட்டியுள்ள ஜனாதிபதி, இத்தகைய சம்பவங்கள் தன்க்குப் பெரும் அதிர்ச்சியையும் மனவருத்தத்தையும் ஏற்படுத்துவதாக குறிப்பிட்டார்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் வேட்புமனுத்தாக்கல் செய்யப்பட்ட பின்னர் 2 வேட்பாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த 29ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளை சுட்டுக் கொல்லப்பட்டமை, இம்மாதம் 27 ஆம திகதி மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மௌனகுருசாமி மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமை எனப் பல வனமுறைச் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றமை தெரிந்ததே. (உ-60,10)



கனடாவைச் சேர்ந்த எம்.ரவிச்சந்திரன் என்பவர் அண்மையில் கோப்பாய் மகாவித்தியாலய மாணவர்களுக்குச் சப்பாத்துக்களை அன்பளிப்பாக வழங்கினார். அந்நிகழ்வில், மாணவியொருவருக்குச் சப்பாத்துப் பொதியை அவர் வழங்குவதையும்,



இதில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# 13வது பொதுத்தேர்தல் பற்றி யாழ்.ஆயர் விடுக்கும் செய்தி

(யாழ்ப்பாணம்)

எதுவித வற்புறுத்தலுமின்றிச் சுதந்திரமாக மக்கள் வாக்களிக்கிறார்கள் என்பது உறுதிப்படுத்தப்படவேண்டும். அதிகார துஷ்பிரயோகம், ஆள் மாறாட்டம், அரசியல் வன்முறை, பயமுறுத்தல், கள்ளவாக்குப் போன்ற தவறான செயல்கள் நடைபெறாமல் இருப்பதை அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும். தேர்தலில் வாக்களிக்காதிருத்தல், சரியான மனத்தெளிவின்றி வாக்களித்தல், முறையற்ற வாக்களித்தலில் பங்குகொள்ள முற்படல் என்பன எல்லாம் ஜனநாயகத் தேர்தல வழிமுறைகளுக்கு ஒவவாதவை. வன்முறைகள் அற்ற தேர்தலாக இத் தேர்தல் அமைய அனைவரும் ஒத்துழைக்கவேண்டி நிற்கிறோம்.

13வது தேர்தல் குறித்து யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை விடுத்துள்ள செய்திக்குறிபபில் இவ்விதம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும், இன்னும்சில தினங்களில் நடைபெறவிருக்கும் 13வது பொதுத் தேர்தல தமிழ் மக்களைப் பொறுத்தவரை மிக முக்கியமானதொரு காலகட்டத்தில் நடைபெறும் தேர்தலாகும். இந்த நாட்டில் தமிழ் மக்களின் எதிர்காலத்தை மிக உறுதியாக எழுதப்போகும் தேர்தல் இதுவாகும்.

சுதந்திரமாக வாக்களிப்பது எல்லா மக்களுக்குமான ஒரு ஜனநாயக உரிமை. இந்த உரிமையை சரியான விதமாகப் பயன்படுத்த வேண்டிய கடமை எல்லோருக்கும் உண்டு. தமிழ் மக்கள் இந்தப் பொன்னான வாய்ப்பை நழுவ விடாமல் அனைவரும் நேர்மையான வாக்களிப்பில் ஈடுபட வேண்டும். போரை அல்ல அமைதியையும், சமாதானத்தையுமே தமிழ் மக்கள் விரும்புகிறார்கள் என்பதை முழு சர்வதேச உலகிற்கும் வெளிக்காட்ட தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து சரித்திரம் படைக்க வாக்களிப்பில் ஈடுபட வேண்டும் என விரும்புகிறோம். யாரும் வாக்களிப்பில் ஈடுபடாமல் இருக்க வேண்டாம். குறிப்பாக இடம்பெயர்ந்தவர்கள் விசேட வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லவேண்டியிருப்பதனால் இச் சிரமங்களைக் கண்டு பின்வாங்காமல் இவ் இடங்களுக்குத் தவறாமல் சென்று வாக்களிப்பில் ஈடுபட வேண்டுகிறோம்.

வாக்குகளை அளிக்கும் போது தேசிய நலனைக் கருத்தில்கொண்டு, தகுந்த பிரதிநிதிகளைத் தெரிவு செய்யவேண்டும் என்பதை மறந்து விடவேண்டாம். தமிழ் மக்கள் அனைவரும் அரசைத் தீர்மானிக்கும் சக்தியாக மாறியுள்ள இவ் வேளையில், எமது வரலாற்றை நாமே எழுத உறுதியாக ஒனறிணைவோம். சமாதானத்தின் பாதையை முன்னெடுத்துச் செல்லும் ஆணையைத் தெரிவுசெய்யபபட்ட அரசிற்கு வழங்க இநத அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்துவோம். யுத்தத்தை வெறுத்து சமாதானத்தை மீளக் கொண்டுவரும் தமிழ் மக்களின் விருப்பம் இத் தேர்தல் மூலம் தெளிவாகத் தெரியப்படுத்தப்பட வேண்டும். இதற்கு உரிய விதமாக தூர நோக்குடனும் துணிவுடனும் நாம் செயல்படவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## 1187 வன்முறைகள் இதுவரை பதிவு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் காலை 6.00மணிவரை சுமார் ஆயிரத்து 187தேர்தல் வன்முறைச்சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் 935முறைப்பாடுகள் குற்றவியல் சட்டங்களையும் 225 முறைப்பாடுகள் தேர்தல் சட்டங்களையும் மீறியுள்ளன. அத்துடன் நேற்றுக்காலை 6.00மணிமுதல் 8.00மணி நேரத்தினுள் மேலும் 27முறைப்பாடுக்ள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

(தி-63)

## ஆயுதங்கள் வைத்திருந்த 4 பேர் கைது

(மட்டக்களப்பு)

துபபாக்கித் தோட்டாக்கள் கைக்குண்டுகள் மற்றும் பல ஆயுதங்களை வைத்திருந்த 4 சந்தேக நபர்களை காத்தான்குடிப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இந் நான்கு சந்தேக நபர்களிடம் இருந்தும் ரி.56 ரக துப்பாககளுக்குரிய தோட்டாக்கள், மகசின்கள, கைக்குண்டுகள் மற்றும் கூரிய ஆயுதங்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

காத்தான்குடிப் பொலிஸார் நேற்று முன்தினம் இரவு நடததிய திடீர் வீதிச் சோதனையை அடுத்தே இந் நால்வரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (தி-63)

## பாலம் பாவனைக்கு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்திக்கருகாமையில் ஏ-9 பிரதான வீதியில் புதிதாக அமைப்படட பாலம் பொதுமக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரினை படையினர் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த பொழுது, மேற்படி பாலம் படையினரால் தகாக்கப்பட்டிருந்தது. மீண்டும் தற்காலிகமாக இரும்புப் பாலம் அமைக்கப்பட்டு போக்குவரத்து நடைபெற்றது.

இப்பாலம் கடந்த சில மாதங்களாகப் புனரமைக்கப்பட்டு வேலைகள் நிறைவுபெற்றதைத் தொடர்ந்து பொதுமக்களின் பாவனைக்கு திறந்து விடப்பட்டது. (உ-35)

# கையெழுத்துச் சஞ்சிகை போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் கடந்த ஆண்டு பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டி முடிவுகள் யாழ். கல்வி வலயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி கையெழுத்துச் சஞ்சிகைகளின் மூலபபிரதிகள் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு, அங்கு மதிப்பீடுகள் செய்யபபட்டு தற்போது யாழ்கலவி வலயத்திற்கு அனுப்பிவைக்கப்படடுள்ளன.

இக் கையெழுத்துச் சஞ்சிகைகளை அனுப்பிய 5 வலயஙகளையும் சேர்ந்த பாடசாலை அதிபர்கள், யாழ வலயக்கல்வி பணிமனையின் கல்வி அபிவிருத்திப் பிரிவு உதவிப் பணிப்பாளர் மீராஅருள் நேசனுடன் தொடர்பு கொண்டு இம்மதிப்பீடுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். கல்வி வலயம் அறிவித்துள்ளது.

(உ-3)

## சிறுமியை வல்லுறவுக்குட்படுத்திய இளைஞனுக்கு 27வருடச் சிறை

(வவுனியா)

வவுனியாவில் எட்டுவயது சிறுமியைக் கடத்திச்சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்டுத்திய இளைஞனுக்கு 27வருடகால கடுழிய சிறைத தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா மேல் நீதிமன்றத்தினால் முதல் தடைவையாக நேற்று முன்தினம் இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது.

இதேவேளை, 05.07.2000ஆம் ஆண்டு பூந்தோட்டப் பகுதியில் வசித்துவந்த 8வயது சிறுமியைக் கடத்திச்சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகக் கூறப்படும இளைஞன் பொலிஸாரினால கைதுசெய்யப்பட்டு 10 மாதங்களுக்கு மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டு, பிணையில் செல்ல அனுமதிககப்பட்ட மேற்படி இளைஞன் தற்போது தலைமறைவாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-62,10)


## 2004–தேர்தல் எப்படி?

## பிரதமர்–ரணில் (ஜாதகம்)


| | | | |
|---|---|---|---|
| பு,சு சூ,செ | ரா | 7 | 8 |
| ♃ | 24.03.1949 | | 9 |
| வி சந் | உத்தராடம் ④ மகரராசி | | சனி |
| 2 | ல | கே | 11 |

25.03.2004 முதல் சனி மகாதெசை ஆரம்பம்.
சனி 10ம்-உச்ச யோகம்
பெறுவதால் மீண்டும் பிரதமராகிறார்.

(C/7476) த.சத்தியதாஸன் (சத்தியா) ஆனைக்கோட்டை.

# ஞானம் போற்ற நடம் புரிந்த
# சிவயோக சுவாமிகளின் குருபூசை

சிவயோக சுவாமிகள் திருவடிக் கலப்புற்று இன்றைய பங்குனி ஆயிலிய நாளுடன் நாற்பது ஆண்டு



களாகின்றன. திருவடிக்கலப்பு என்பது மாசற்ற சோதியினின்றும் மலர்ந்த மலர்ச்சுடர், மண்மேல் ஒளி செய் மானுடமாய் நடமாடிச் சோதித் திறம் காட்டிய பின், மீண்டும் மாசற்ற சோதியாய் நிலைத்தலாம். ஆகவே ஒரு ஞானதேசிகனைக் கதிரவனின் ஒளிக்கதிருக்கு ஒப்பிடலாம்.

ஒளிக்கதிர் தேசகால நியதிகளுக்கியையப் பிரகாசிக்கின்றது. கதிரவனோ இந் நிலைமைகளுக்கப்பால் விண்மேல் விளங்குகிறான். ஞானி ஒருவரும் தேசகால நிலைமைகளுக்கேற்ப ஞானத்திறம் விளக்குகிறார். அவர் விளக்கம் செய்யும் ஞானமோ தேசகாலம் யாவும் கடந்த பூரண ஞானமாகும். அவரது அருள் மேனி அன்பர் தம் காட்சிக்கு எளிய அளவாயமைகிறது. அவர் தம் உண்மைச் சொரூபமோ சிவசோதியாய் ஒளிர்வது.

ஆகவே அவர் தம் மானிடக் கோலம் காட்டிய சோதியினும் அவர் தம் பூரணக் கோலம் மகத்தானதென்பது தெளிவு. அதனாலே தாம் சித்தாந்த நெறி ஞானியின் பிறநத நாளிலும் அவரது திருவடிக கலப்பு நாளைக் கொண்டாடுவதை மரபாகக் கொண்டிருக்கிறது.

## தன்னை அறிதலே குருபு'சை

ஆகவே சிவயோகசுவாமிகளது இக் குருபூசை நாளின் போது அவர் தம் உண்மைச் சொருபத்தையே பூசிக்கிறோம். உற்று நோக்கின சுவாமிகள் தேவையேது மற்றவர். உண்மை விளக்கம் செய்யும் தம் இயல்பான பணியையே அவர் செய்தார். அவர் தன் நிலமையைக் காட்டி அந் நிலைமையே நம்நிலையுமென்றுணர்த்தினர். தன்னிலைமையே மன்னுயிர்கள் சார வேண்டுமென்ற தனிப் பெருங்கருணையாலே தான் மண்மேற் பணி செய்து திரிந்தனர். அவர் பணியுணர்ந்து நமது உண்மை நிலையை விளங்கிக் கொள்வதே நம கடன். அதாவது சுவாமிகள் நமது உண்மை நிலையை உணர்ந்தியிருக்கிறார். அவர் உணர்த்திய படி நம்மை நம்மாலறிந்து ஆனந்தம் கொண்டிருப்பதே நாம் அவருக்குச் செய்யும் பூசை. "**தன்னை அறிதலே குருபு'சை**" என்பதும் அவர் தம் அருள்மொழி.

சிவயோகசுவாமிகள் ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுகாலம் இவ்வுலகிலே வாழ்ந்தார். இதில் அரை நூற்றாண்டுகாலம் "ஞானதேசிகராய் நடமாடினார். அவர் யாழ்ப்பாணத்து நகர வீதிகளிலும் சிற்றூர்களிலும் திரிந்தார். அடியவர் இருப்பிடம் தேடி மலை நாடுகளுக்குச் சென்றார். "இலங்கையிலே எங்கும் இருக்கும் மணி" என்ற அவர் வாக்குப்போல இலங்கை எங்கும் ஞானச்சுடர் விளக்காய் திரிந்தார். அவர் எவருக்கும் பாரபட்சம் காட்டியதில்லை. யாவருக்கும் இல்லையெனாது இலவசமாய் கொடுக்கும் நன்மருந்து எப்போதும் அவர் கைவசமிருந்தது.

## அறிவுச் சொரூபமாய் திகழ்ந்தவர்

திறவோர் யாவரும் அவர்தம் அறிவு சொருபத்தைக் கண்டனர். தூங்கிக் கிடந்தோரும் விழித்திருநதும் உள்ளக் கருத்தினை இழந்தவர்களுமே அவரைக்காணும் பாக்கியம் இல்லாது போயினர். அவர் கதிரொளி போல் கணைக்கும் கடல்,சூழ இலங்கை எங்கும் அறிவொளிவூட்டினார். கருணை மேகனான அவர் சொரிந்த மாறாச சொற்றுளிகள் அமுத வெள்ளமாய் பெருகியது. அவ் வெள்ளத்தை அணைகோலி வைத்த பெரு நீர்த் தேககம் போல நற்சிந்தனை, அருள மொழிகள் என்னும் இரு திரு நூல்கள் உள்ளன.

ஞானதானம் வழங்கும் கொடை மடம் போன்ற இரு சிவதொண்டன் நிலையங்கள்போன்று வடக்கிலும், கிழக்கிலும் உள்ளன. சிவ தொண டன் "ஏடு" ஒன்றும் திங்கள் தோறும் அடியவர் இல்லம் சென்று ஆசான் செப்பிய வாசகத்தை விளக்கம் செய்கின்றது. இவ்வற்றால் சுவாமிகள நடமாடிய காலத்திற் போலவே இப்போதும் அவர் சோதி பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

நம் மனக்கருத்தெல்லாம் நிறைவேறற்குரியவோர் "மான சரோவர்" போல சுவாமிகள் அருளிச் செய்த நற்சிந்தனை எனும் நல்லமுளது கல்விச் சிறந்த நம் நாட்டவர் அதனை நன்கு சிந்தித்து தெளிந்து ஒழுகுதலொன்றே சுவாமிகளுக்குச் செய்யும் சிறந்த பூசனையாக இருக்கும். ஈண்டு சுவாமிகளது திருமுகப் பகுதியிலுள்ள சில வசனங்களை சிந்தித்துணர முயல்வோம்.

### உத்தம இரகசியம்

**"நாங்களெல்லாம் ஒரே சமயத்தையும் ஒரே சாதியையும் சார்ந்தவர்கள். எங்களுக்குள்ஒரு மாறுதலுமல்லை. நாங்கள் பரிசுத்தரும், தெய்வத்துள் வைக்கப்பட்டவர்களாகவும் இருக்கின்றோம்.**

**வித்தியாசம் வித்தியாசமான மாறுதல்கள் யாவும் உண்மைச் சுபாவத்தின் சிறப்புகளாக இருக்கின்றன. இவைகளை மாயை எனப் பெரியோர் சொல்வர்...**

## உயிர்கள் அனைத்தும் ஒன்றே

நாங்கள் ஒருவரோடொருவர் "**மாறுபட்டு**" நிற்பதையே பழக்கமாக்கிக் கொண்டிருக்கிறோம். இதன் பொருட்டு எத்தனையோ வேறுபாடுகளைக் கற்பித்துக் கொண்டிருக்கிறோம். சாதி, சமயம், நாடு, ஊர், பெரியவன், சிறியவன், வல்லவன், வலுவில்லாதவன், நண்பன், பகைவன் என்று இவ் வேறுபாடுகள் அளவிடக்கூடாதனவாய் பெருகியுள்ளன, இவ்வேறுபாடுகள் எதுவும் எமது உண்மைச் சுபாவத்தில் உள்ளனவல்ல.

எமது உண்மைச் சுபாவம் நாமெல்லாம் **ஒரே ஆள** என்பதே. நாமெலாம் **தெய்வத்துள** வைக்கப்பட்டவர்களும், பரிசுத்தருமாயிருப்பதால் வேறுபாடேதுமில்லாத "ஒரே ஆள்" ஆக உள்ளோம். இது நமது "**உண்மைச் சுபாவம்**" ஆகும் சுவாமிகள் கூறியுள்ள இந்த "**உண்மைச் சுபாவம்**" என்பது நாம் ஊன்றிச் சிந்தித்து உணர்தற்குரிய ஓர் உத்தம இரகசியமாகும். "சுபாவம்" எனக் கூறியிருப்பதால் இதுவே எமது "சொந்தப் பண்பு ஆகும்". ஆதலால் **யாதும் ஊரே யாவரும் கேளிர்** என்று உயிர்த்திரள் அனைத்தையும் "**ஓரே ஆளா**"கக் கண்டிருப்பதே எமது உண்மை நிலையாகும்.

இந்த உண்மைச் சுபாவம் வெளிப்படா வண்ணம் மூடி மறைத்திருக்கும் எண்ணிலடங்காத வேறுபாடுகள் எல்லாம் மண்ணினில் மாயை வகுத்த சூழ்ச்சியாகும். இவ் வேறுபாடுகளை வகுத்த மாயையே எமது **வெம்பகை** இவ் வெம்பகையை வென்று வெற்றியெடுப்பதே எமது உண்மையான வீரம். இத்தகைய வெற்றிகொள்ளுமாறே சுவாமிகள் கூறித்திருந்தார். வேறுபாடுகள் என்றும் இவ் வெம்பகையை வெற்றிகொண்டால் தெய்வத்துள் வைக்கப்பட்டிருக்கும் எமது உண்மைச் சுபாவத்தில் இன்புற்றிருக்கலாம் அல்லவா! மாறுதல்கள் பேசி மாறாட்டக்காரராய் திரியாமல், திருவடி நிழலில் உண்மைச் சுபாவத்தில் இன்புற்றிருந்தற்கெனவே சுவாமிகள் சிவதொண்டன் நிலையத்தை நிறுவினர். இந்த உண்மைச் சுபாவத்தை அறிதலே தன்னை அறிதலுமாம். தன்னை அறிதலே குருபூசை எனத் தொடக்கத்தில் அறிந்தோம் அல்லவா! ஆதலால் வேறுபாடுகளையெல்லாம் மறந்து ஒன்றில் ஒன்றியிருத்தல் பற்றிச் சிந்தித்தலே இக் குருபூசை நாளில் நம் சிந்தனைக்குரியதாம். ஒன்றில் ஒன்றியிருத்தலே நற்சிந்தனையாதலால் அவன் இவனென்று வேறுபாடு பாராட்டுதல் முறையாகுமா? இது பரசுகத்துக்குரிய சிந்தனைமாத்திரமன்று இகசுகத்துக்குரிய சிந்தனையும் இதுவே. ஆதலால்,

**தும்பிமுகன் துணையென்றும்**
**தம்பிமாரே**
**நம்பிக்கை யோடுழைப்பீர்**
**தம்பிமாரே**
**ஓம் என்று சிந்தை செய்வீர்**
**தம்பிமாரே**
**ஒன்றாயிருந்திடுவீர்**
**தம்பிமாரே**
**வெம்பகையை வென்றிடுவீர்**
**தம்பிமாரே**
**வேறுபாடில்லை யென்பீர்**
**தம்பிமாரே**

> **சிவயோக சுவாமிகளின் குருபூசைத்தினம் இன்றாகும் அதனையொட்டி இக் கட்டுரை வெளியாகின்றது.**

---

# சோனியாவின் குடியுரிமை பற்றி
# சுப்பிரமணிய சுவாமி விடும் கரடிகள்

(சென்னை)

காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியாகாந்தி இன்னமும் தமது இத்தாலிய குடியுரிமையை திரும ஒப்படைக்கவில்லை என்று ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சோனியா காந்தியின் புதல்வர் ராகுல் காந்தியும் புதல்வி பிரியங்காவும் 1992 ஆம் ஆண்டு இத்தாலியக் குடியுரிமையைப் பெற்றார்கள் என்று கூறினார்.

1991 ஆம் ஆண்டு இத்தாலிய குடியுரிமைச் சட்டத்தில் கொண்டு வரப்பட்ட ஒரு திருத்தத்தின் படி வெளிநாட்டில் வாழும் இத்தாலியர்களின் குழந்தைகள் வெளிநாடுகளில் பிறந்திருந்தாலும் கூட, இத்தாலிக்கு ஒருநாள் வருகை புரிந்திருந்தாலே அந்நாட்டுக் குடியுரிமையைப்பெற அவர்கள் தகுதியடைகிறார்கள் என்று சுப்பிரமணியசுவாமி கூறினார்.

இதைச் சோனியாகாந்தி மறுக்க முடியாது என்றும் இதற்கான ஆதாரபூர்வ ஆவணங்கள் தம்மிடம் உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ராஜீவ் காந்தியைத் திருமணம் செய்து கொண்ட உடனேயே சோனியா காந்தியின் வெளிநாட்டுப் பிறப்புப் பற்றி ஏன் பிரச்சினை ஏழுப்பவில்லை என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறுவதைப் பற்றிக் குறிப்பிடுகையில், தமிழக முதலமைச்சராக இருந்த எம்.ஜி.இராமச்சந்திரன் கேரளத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர் என்று கருணாநிதி கேள்வி எழுப்பியது ஏன் என அவர் கருணாநிதியை வினவினார்.

இத்தாலியில் பிறந்த சோனியா காந்தியைப் பிரதமர் பதவிக்கான வேட்பாளராக ஆதரிப்பது ஏன் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

தமிழ் நாட்டில் புதிய நீதிக் கட்சியுடன் இணைந்து 31 மக்களவைத் தொகுதிகளில் போட்டியிடும் ஜனதாக் கட்சி 9 தொகுதிகளில் அ.இ.அ.தி.மு.க.வினரை ஆதரிக்கும் என்றும் அவர் கூறினார். (து)

# தாமரைக் கனியை தாக்கிய வழக்கு
# வை.கோவை நேரில் ஆஜராக
## நீதிபதி உத்தரவு

(சென்னை)

1984 ஆம் ஆண்டு தேர்தலின் போது அ.இ.அ.தி.மு.க.வின் அப்போதைய சட்டமன்ற உறுப்பினராகவிருந்த தாமரைக் கனியை, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. தாக்கியதாகத் தொடரப்பட்ட வழக்கிலிருந்து தம்மை விடுவிக்குமாறு கோரும் வை.கோ.வின் மனுவை சென்னை உயர் நீதிமன்றம் கடந்த திங்கட்கிழமை தள்ளுபடி செய்தது.

கடந்த 20 ஆண்டுகளாக நாகபட்டினம் கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் இது தொடர்பான வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்ற வை.கோ.வின் கோரிக்கை மனுவை விசாரித்த நீதிபதி ஏ.பாக்கியராஜ், விசாரணை நீதிமன்றத்தில் குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 313 இன் கீழ், நீதிபதி கேட்கும் கேள்விகளுக்கு நேரில் ஆஜராகி வை.கோ.பதிலளிக்க வேண்டும் என்றும், தீர்ப்பு நாளன்றும் அவர் நீதி மன்றத்தில் ஆஜராக வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

(து)

# அவதூறு விளம்பரங்களுக்குத் தடை
# தே. ஆணையமே முடிவு செய்யும்

சோனியா காந்தியை மறைமுகமாக அவதூறு செய்வதாக காங்கிரஸ் கட்சியால் கூறப்பட்ட விளம்பரத்தை ஒளிபரப்பாமல் தடை செய்யத் தற்போதைய சட்டத்தில் இடமில்லையென்று தேர்தல் ஆணையத்திடம் மத்திய அரசு கருத்துத் தெரிவித்திருப்பதாக அதிகார வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

புகாருக்குள்ளான விளம்பரம் அரசியல் ரீதியிலானது என்பதால் தேர்தல் ஆணையம் தான் அதைத் தடைசெய்வது பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று மத்திய அரசின் தகவல் ஒலிபரப்புத் துறையால் அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் தேர்தல் ஆணையத்துக்கு எழுதிய கடிதத்தில் கூறியிருக்கிறார். (து)

**இந்தியச் செய்திகள்**

# அயோத்தியில் இராமர் கோவில்
# துணைப் பிரதமர் அறிவிப்பு

(காந்திநகர்)

இந்துக்களும் முஸ்லிம்களும் நல்லிணக்கத்தோடு வாழவேண்டிய நேரம் வந்துவிட்டது; அதற்குரிய எல்லா நடவடிக்கைகளையும் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு மேற்கொண்டிருக்கின்றது என்று துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி கூறியிருக்கிறார்.

காந்தி நகரில் அண்மையில் செய்தியாளர்களுடன் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நல்லிணக்கம் என்பது எந்த ஒரு தரப்புக்கும் அநீதி இழைப்பதாகவோ, திருப்திப்படுத்துவதாகவோ அமையக் கூடாது என்று அவர் கூறினார்.

சிறுபான்மை மக்கள் வாக்கு வங்கிகளாகத் தாங்கள் பயன் படுத்தப்படுவதை உணர்ந்து வருகிறார்கள் என்றும், பா.ஜ.கட்சிக்கு எதிராகப் புனைந்துரைக்கப்பட்ட புகார்களை அவர்கள் குறித்துக் கொண்டுள்ளார்கள் என்றும் அவர் கூறினார்.

தற்போது உருவாகியுள்ள நல்லிணக்கம் காரணமாக அயோத்தியில் இராமர் பிறந்த இடத்தில் அவருககுக் கோவில் கட்ட உகந்த சூழ்நிலை உருவாகியுள்ளது என்றும் அத்வானி குறிப்பிட்டார்.

குஜராத் மாநிலம் காந்திநகர் மக்களவைத் தொகுதியில் நானகாவது முறையாக பா.ஜ.க. வேட்பாளராகப் போட்டியிடும் அத்வானி, அண்மையில் தனது வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார்.

அவர் வேட்பு மனுவைத் தாக்கல் செய்த போது, பா.ஜ.க. தலைவர் வெங்கைய நாயுடுவும், குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி மற்றும் கட்சியின் மூத்த தலைவர் கள் உடனிருந்தார்கள்.

(து)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

90

## 3.முக்குவர் சட்டம் (ஆங்கில நூலின் தமிழாக்கம்)

### முதலாம் அத்தியாயம்
### சொத்துடைமைகளின் வகை

முதுசொமாகிய பணங்கொண்டு வாங்கப்படும் சொத்தும் முதுசொமானவற்றைக் கொடுத்துப் பரிமாறிய சொத்தும் முதுசொமாகக் கொள்ளப்படுவதில்லை. அவை தேட்டம் என்ற வகையினைச் சேரும்.

மேல்வரும் வகைகளைச் சேர்ந்த அசைவுள்ள, அசைவற்ற சொத்துகள் எல்லாம் தேட்டம் என்ற பிரிவில் அடங்கும்.

1. கணவன் தானாகவே சம்பாதித்தவை.
2. மனைவி தனியாகச் சம்பாதித்தவை.
3. கணவனும் மனைவியுங் கூடிச் சேர்த்தவை.
4. கலியாணத்திற்கு முன் இருவரும் சேர்த்தவை.
5. கலியாணத்திற்குப் பின் அவர்கள் தேடியவை.
6. அன்னியர் மூலமாகவும் உறவினர் மூலமாகவும் தங்கள் பிற் சந்ததியார் மூலமாகவும் கணவனும் மனைவியும் பெற்றுக்கொள்ளும் சொத்துகளும் இதிற் சேரும்.

சொத்துகள் வேறு வகைக்கு உரியவை என்று தகுந்த ஆதாரங்களோடு திட்டம் பண்ணப்படாதவரையும் அவை யாவும் தேட்டம் என்றே கருதப்படும்.

21. தாய்வழி முதுசொம் பற்றிய பிரச்சினைகள் யாவும் மேல்வரும் உரிமைகள் குறித்தனவாகும்.

1. ஆட்சி
2. உடைமை உரிமை: உடையவன் காணியைச் செய்கை பண்ணிக்கொண்டு, அதனால் ஏற்படுகிற செலவினங்களுக்கும் பிரயாசத்துக்கும் ஈடாக விளைவின் ஒரு குறிப்பிடத்தகும் பாகத்தை தன்வசமாக வைத்திருக்க உரிமை கொண்டிருத்தல்.
3. நிலபோக உரிமை: அதாவது காணியைச் செய்கைபண்ணி அதன் பயன்களை அனுபவிக்கும் உரிமை.
4. காணியை விற்பனை செய்யவும், பிறருக்கு கொடுக்கவும், பாகம் பிரிக்கவும், காணியால் வரும் பொறுப்புகளை உத்தரிப்பதற்குமான உரிமை.

இந்நான்கு உரிமைகளுள் ஒவ்வொன்றும் தனித்தனியாகவும் மற்றொவ்வொன்றில் இருந்து வேறுபட்டதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(அ) ஆட்சி உரிமை ஒருவருக்கும், உடைமையும் போக உரிமையும் வேறொரு உரிமையாளருக்கும் வழங்கப்படுதல் கூடும். அதேசமயம் விற்பனை செய்யும் உரிமை இருவருக்கும் உடையதாய் இருக்கும்.

ஆயினும், போக உரிமையாளருக்கு மட்டும் விற்பனை உரிமை வழங்கப்பட்டுள்ள இரு சந்தர்ப்பங்களை அவதானிக்க முடிந்தது.

(ஆ) உடைமை உரிமையை ஒருவருக்கும் ஆட்சி, போகம், விற்பனை என்பன பற்றிய உரிமைகளைப் பிறருக்கும் கொடுப்பது உண்டு.

(இ) பின்பு விளக்கப்பட்டுள்ள சில திடமான நியதிகளுக்கு அமையச் சில சமயங்களிலே உரிமையாளர் ஒருவருக்குப் போக உரிமை, உடைமை உரிமை ஆகிய இரண்டினையும வழங்குவது உண்டு. வேறு சில சமயங்களிலே போக உரிமை ஒருவருக்கும் உடைமை உரிமை இன்னொருவருக்குமாகக் கொடுக்கப்படும்.

(ஈ) விற்பனை உரிமை ஆட்சி உரிமை பெற்றவருக்கும் உரியதாய் இருக்கும். ஆனாற் போக உரிமையாளரின் உரிமைகள் ஒப்புக்கொள்ளப்படுதல் வேண்டும்.

முன்னே கூறியவாறு சில சமயங்களிலே போக உரிமையாளருக்கு விற்பனை உரிமையும் வழங்கப்படும்.

### இரண்டாம் அத்தியாயம்
### கணவனும் மனைவியும் வாழுங்காலத்திற் சொத்துக்களைக் கையாளும் விதங்கள்

22. மேலே சொல்லப்படும் எல்லாவிதமான சொத்துகள் மீதும், மனைவியின் சம்மதமின்றியும், கணவன் சகலவிதமான ஆதன உரிமைகளையும் கொண்டிருப்பான்.

1. எல்லா வகையான தேட்டம்.
2. அவனுடைய தந்தை வழியான அசைவற்றனவும் அசைவுள்ளனவுமான முதுசொமான சொம்கள் .
3. அவனது தாய்வழி முதுசொமான அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான சொம்கள்.
4. மனைவியின் தந்தை வழியான அசைவுள்ள சொம்கள்.
5. அவளுடைய தந்தை வழியான அசைவுள்ள முதுசொமான சொம்கள்.
6. அவளுடைய தாய்வழியான அசைவுள்ள முதுசொமான சொம்கள்.

23. 1. ஆனால், அவளுடைய தந்தை வழியான அசைவற்ற சொம்கள் அசைவற்ற முதுசொமான சொம்கள் என்பவற்றைப் பொறுத்தவரையில் அவற்றைப் பராமரிக்கும் உரிமை மட்டுமே கணவனுக்கு உண்டு.

2. அவளுடைய சம்மதமின்றி அவற்றை அவனால் விற்கவோ பிறருக்குக் கொடுக்கவோ முடியாது.

3. அவளுடைய சம்மதமின்றி, அவற்றைக் குறித்து அவனாற் செய்யப்படும் விவகாரங்கள் எவையும், அவர்களில் எவரேனும் ஒருவரின் மரணத்தாற் கலியாண உறவுகள் முடிந்து போன பின்பு, மனைவியினதும் அவளுடைய உரிமைக்காரரதும் பொறுப்பாவதில்லை.

24. கணவனுடைய தாய்வழி முதுசொம் (முக்குவர் சட்டத்திலே தாய்வழியான முதுசொம்கள் மீது ஆணொருவனுக்குச் சீவிய உரித்து மட்டுமே உண்டு) காணி செய்கை பண்ணுவதற்கும், அரசாங்கத்திற்குரிய இறை கடன்களைச் செலுத்துவதற்கும், தானும் தனது முன்னோர்களும் கடன்பட்டதுண்டாகில், அக்கடன்களைத் தீர்த்துக்கொள்வதற்குமன்றி, வேறெக்காரணங்கொண்டும், சகோதரிகளின் சம்மதமின்றி, தனக்குப்பின் பிறருக்கு உரிமையாகும்படி, அவற்றை ஒருவன் விற்கவோ நன்கொடை பண்ணவோ முடியாது.

(தொடரும்)

## இராணுவப் பிரிவு வைத்தியர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் எதிர்வரும் 26.04. 2004 இல் இருந்து இரண்டு கிழமைகளுக்கு ஐக்கிய அமெரிக்க நாட்டின் இராணுவப் பிரிவைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள் நோயாளர்களுக்கான சிகிச்சைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை, காது, மூக்கு, தொண்டை சத்திர சிகிச்சை, முறிவு, தெறிப்பு சத்திரசிகிச்சை, பொது சத்திரசிகிச்சை ஆகியவற்றை இவர்கள் மேற்கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, இவ் வகை சத்திர சிகிச்சைகளுக்கு உட்பட விரும்பும் நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலை வெளி நோயாளர் பகுதியில் தங்கள் பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்யுமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(உ)

## ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் பட்டியலை நிராகரிக்கக் கோரி மனு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் பட்டியலை நிராகரிக்குமாறு தென் மாகாண சபை உறுப்பினர் ஹெக்ர பெக்மகே, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவிடம் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது,

ஐக்கிய தேசிய முன்னணியின் கொழும்பு மாவட்ட அபேட்சகர்களில் ஒருவரான மொகமட் சகீப் ரஜாப்தீன் ஜேர்மனியின் நதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளதால் தாங்கள், தங்களுக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி இது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1975ஆம் ஆண்டு போதைப் பொருள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஜேர்மனியில் வைத்து அந்நாட்டுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட ரஜாப்தீன் ஜேர்மனி நீதிமன்றின் உத்தரவின்பேரில் இரண்டு வருடகாலம் சிறைவாசம் அனுபவித்துள்ளார்.

அத்துடன் , 1990ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 23ஆம்திகதி ஜேர்மன் நாட்டு பொலிஸ்மா அதிபரினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட இவர், போலக் கடவுச்சீட்டுக்களை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சில மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவித்துள்ளார்.

அதன் பின்னர் 2000ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் ரஜாப்தீனுக்கு இலங்கையில் தங்கியிருந்த காலத்தில் சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெற்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கொழும்பு மேலதிக நீதிவான் ஜே. ஆர் திஸநாயக்க 5 ஆயிரம் ருபா தண்டப்பணத்தை விதித்திருந்தார்.

இக்காலப்பகுதியில் ரஜாப்தீனின் மனைவி கொழும்பு மாவட்ட நதிமன்றத்தில் தாபரிப்பு வழக்கொன்றையும் தாக்கல் செய்திருந்தார் என்று தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பித்த மனுவில் ஹெக்ர பெக்மகே குறிப்பிட்டுள்ளார்.

இம்மனுவில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மாவடட வேட்பாளர்களான ஹனீபா இஸாக், சந்தன கத்திரியாராட்சி ஆகியோரும் கையெழுத்திட்டுள்ளனர்.

(உ-60,10)

யாழ்ப்பாணம்
ஆ.வேலுப்பிள்ளை & சன்ஸ்
ஆதரவுடன்
வலம்புரி-சங்குநாதம் நடத்தும்
பாராளுமன்றப் பொதுத்தேர்தல் - 2004
கருத்துக்கணிப்புப் போட்டி

வினாக்கள்

- 13வது பாராளுமன்றத்தில் ஆட்சி அமைக்கும் கட்சி எது?
- யாழ். மாவட்டத்தில் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை, கட்சி, சுயேட்சை ரீதியாக?
- யாழ். மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்பது பேரின் பெயர்கள்?

இங்கே வெட்டவும்

பாராளுமன்றப் பொதுத்தேர்தல் - 2004
கருத்துக்கணிப்பு

முழுப்பெயர் :..............................
தபால் முகவரி :-..............................
..............................
அ.அ.இல

உங்கள் விடைகளை
கருத்துக்கணிப்புப் போட்டி
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்
எனும் முகவரியில் இன்று நேரில் வந்து சமர்ப்பிக்கலாம்.
போட்டியில் வெல்வோருக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.
குறிப்பு:- உங்கள் விடையுடன் கூப்பன் ,ணைக்கப்பட வேண்டும்.

# ஆஸி.மனிதவியல் நிபுணர் முரளிதரனைப் பரீட்சிப்பார்

இலங்கை அணியின் நம்பிக்கை நட்சத்திரமும் நட்சத்திர சுழற் பந்து வீச்சாளருமான முத்தையா முரளிதரனின் பந்துவீச்சுத் தொடர்



பாக எழுப்பப்பட்ட சர்ச்சையை நிவிர்த்தி செய்யும் பொருட்டு முரளி தரனை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்ப இலங்கைக் கிரிக்கெற் சபையின் நிறைவேற்றுக்குழு தீர் மானித்துள்ளது.

இலங்கைக் கிரிக்கெற் சபையின நிறைவேற்றுக்குழு நேற்று முன் தினம் கூடி இத் தீர்மானத்தை எடுத்தது. இக் கூட்டத்தில் முரளி தரனின் பந்துவீச்சுத் தொடர்பாக ஆராய்வதற்கு அவுஸ்திரேலியாவின் மேற்குப் பிராந்திய பல்கலைக் கழகத்தின் பேராசிரியர்களான புறூஸ் எலியன்ட் மற்றும் பரல் பொஸ்ரர் ஆகியோரிடம் அனுப்பு வதென தீர்மானிக்கப்பட்டது. இதற் கான சகல செலவுகளையும் இலங் கைக் கிரிக்கெற் நிறுவனம் பொறுப பேற்கும் எனவும் தீர்மானிக்கப்பட் டுள்ளது.

பேராசிரியர் புறூஸ் எலியன்ட் சர்வதேச கிரிக்கெற் பேரவையின் மனிதவியல் அசைவுகள் தொடர் பான நிபுணர் என்பதும் குறிப்பிடத் தக்கது. (யே-121)

## மே. இந்தியத் தீவுகள் அணிக்கு புதிய இடைக்கால முகாமையாளர்

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக் கெற் அணியின் இடைக்கால முகா மையாளராக ரொனிஹவாட் பதவி ஏற்றுள்ளார். இங்கிலாந்து அணிக் கெதிரான முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் மேற்கிந்தியத் தீவு கள் தோல்வியடைந்ததன் எதி ரொலியாக ரிக்கிஸ் ஹரிட் அணி முகாமையாளர் பதவியை இராஜி னாமாச் செய்திருந்தார்.

இடைக்கால முகாமையாள ராக ஹவாட் நியமிக்கப்பட்டுள் ளார். எஞ்சியுள்ள போட்டிகளில் இங்கிலாந்து வெற்றிபெறுவதை தடைசெய்வதே தனது குறிக்கோ ளாக இருக்கும் என்று புதிதாகப் பொறுப்பேற்றுள்ள ஹவாட் கூறி யுள்ளார்.

அத்துடன், உற்சாகமிழந்திருக் கும் மேற்கிந்தியத் தீவுகள் வீரர் களின் திறமையை வெளிப்படுத துவதற்கு ஆவன செய்யப்போவ தாகவும் அவர் மேலும் குறிப்பிட் டுள்ளார். (யே-121)

# கனவான்கள் செய்த கேலிக் கூத்துப் பிசுபிசுத்தது

கொழும்பு எஸ்எஸ்ஸி. மைதானத் தில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரே லிய அணி முன்வைத்த வினோத மான முறைப்பாடு பிசுபிசுத்துப் போனது.

அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் பிரட் வில் லியம்ஸ் வீசிய பந்தை அடித்த இலங்கை அணித்தலைவர் ஹசான் திலகரெட்ண ஒரு ஓட்டம் எடுப்ப தற்காக ஓடிவந்தார். அப்போது அருகில் களத்தடுப்பில் ஈடுபட்டி ருந்த ஜஸ்ரின் லாங்கர் வேல்ஸை வலது கைவிரலால் தட்டிவிட்டார். இதையடுத்து அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கிப் பொண்டிங உடனே அவுட்கோரினார்.

இதனால் ஒன்றும் புரியாத நடு வர்கள் பிரச்சினையைத் தொலைக் காட்சி நடுவர் பீட்டர் மனுவலி டம் கொண்டுசென்றனர். தொலைக் காட்சி சலனப்படத்தில் பார்த்த போது வேல்ஸைத் தட்டிவிட்டது துடுப்பாட்ட வீரர் அல்ல ஜஸ்ரின் லாங்கர் தான் என்பது தெளிவாகத தெரியவநதது. இதனைத் தொடர்ந்து ஆட்டமிழப்பு வழங்கப்படவில்லை.

கிரிக்கெற் விதிமுறையின்படி ஒரு துடுப்பாட்ட வீரர் விளையா டும்போது தனது உடலின் எந்தப பாகத்தையாவது வைத்து வேல் ஸைத் தட்டிவிட நேர்ந்தால் அது ஹிட் விக்கெற் முறையில் அவுட் டாகக் கருதப்படும். ஆனால் இங்கே எதிரணியின் லாங்கரே தட்டிவிட்டு அதற்கு பொண்டிங் அவுட் கோரி யது வினோதமாக இருந்தது.

இவர்களது செயலானது கன வான் விளையாட்டு என்று அழைக் கப்படும் கிரிக்கெற்றுக்கு ஏற்றதாக அமையவில்லை. இதுகுறித்து பின்னர் லாங்கர் கருத்துத் தெரி விக்கையில்,

வேல்ஸைத் தட்டிவிட்டது எனக் குத் தெரியாது என்றார். ரிக்கிப் பொண்டிங் இன்னும் ஒரு படி மேலாக வேல்ஸ் எப்படி விழுந் தது என்பது தெரியாது என மழுப் பினார். எனினும் இப்பிரச்சினை யில் இருந்து லாங்கர் தண்டனை எதுவும் இனறி எச்சரிக்கப்பட்டு விடு தலை செய்யப்பட்டுள்ளார். (யே-121)

**விளையாட்டுச் செய்திகள்**

## தெற்காசிய வி.விழாவில் இலங்கைக்கு 3 பதக்கங்கள்

பாகிஸ்தானின் இஸ்லாமபாத தில் நடைபெற்றுவரும் தெற்காசிய விளையாட்டு விழாவில் இலங்கை இரண்டு வெள்ளிப்பதக்கங்களை யும் ஒரு வெண்கலப் பதக்கத்தை யும் பெற்றுப் பதக்கப்பட்டியல் வரிசையில் 4வது இடத்தில் உள் ளது. 8 நாடுகள் பங்குபற்றும் இத் தெற்காசியப் போட்டிகளில் இந்தியா 5தங்கம், ஒரு வெள்ளி, ஒருவெண்கலம் என மொத்தமாக 7 பதக்கங்களைப் பெற்று முன்னி லையில் உள்ளமை குறிப்பிடத் தக்கது.

தெற்காசிய விளையாட்டுப் போட டியை நடாத்தும் பாகிஸ்தான் 3 தங்கம், 1வெள்ளி, 4வெண்கலம் என மொத்தமாக 8 பதங்களை வெற்றிகொண்டு பதக்கப்பட்டிய லில் இரண்டாம் இடத்தில் உள் ளது.

இதேவேளை, பங்களாதேஷ் ஒரு தங்கம், 5வெள்ளி, 2வெண் கலம் என 8பதக்கங்களைப் பெற்று 3வது இடத்தில் உள்ளமை குறிப் பிடத்தக்கது. (யே-68,121)

## யாழ்.அணி தோல்வி

(சுண்டுக்குளி)

அகில இலங்கை உதைபந் தாட்ட சம்மேளனம 19வயதிற்கு உட்பட அணிகளுக்கிடையே அகில இலங்கை மட்டத்தில் "எவறெடி" வெற்றிக்கிண்ணத்திற்கான லீக் முறையில் நடாத்திவரும் உதை பந்தாட்ட போட்டித் தொடரில், கடந்த செவ்வாய்க்கிழமை கனுத்துறை பார்க் விளையாட்டு மைதானத் தில் இடம்பெற்ற கால் இறுதி ஆட்டம் ஒன்றில், களுத்துறை அணி அதனை எதிர்த்து ஆடிய யாழ்.அணியை 5:1என்ற கோல் கணககில் வென்றது.

தொடக்கம் முதல் இறுதிவரை வெகு விறுவிறுப்பாக இருந்த இவ் ஆட்டத்தில் யாழ்.முன்னணி வீரர் கள் கோல் போடக்கிடைத்த அரிய வாய்ப்புகளைப் பயன்படுத்தாமல் விட்ட அதேவேளையில், களுத் துறை அணியினர் கிடைத்த வாய்ப புகளை எல்லாம் நன்கு பயன் படுத்தி கோல்களைப்பெற்று வெற்றி யீட்டினர்.

இவ் ஆட்டத்திற்கு மத்தியஸ் தர்களாக எம்.ஏ.ஆப்டீன், சுனில் பெரேரா, எஸ்.சிசிலகுமார ஆகி யோர் கடமையாற்றினார்கள். (யே-110)

## சதுரங்கத் தெரிவுப் போட்டி வெற்றி பெற்றோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அரச சதுரங்கச் சம்மேள னத்தால் அண்மையில் மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட அகில இலங்கை இளையோருக்கான சதுரங்கத் தெரிவுப்போட்டிகளில் வெற்றிபெற்றோரின் விபரம் வருமாறு,

**8 வயதுப் பிரிவு**

**ஆண**

மோ.ஆகாஷன்.

**பெண்**

பா.காயத்திரி

**10வயதுப் பிரிவு**

**ஆண**

எஸ்.சஞ்சயன்

**பெண்**

பா.மாதங்கி, எஸ்.பிரியங்கா.

**12வயதுப் பிரிவு**

**ஆண்**

என்.லவலோஜன், ஜே.ஜெய மாருதி,

**பெண்**

ஜே.லக்ஷி, ஜே.ஜெனித்தா

**14 வயதுப் பிரிவு**

**ஆண**

எஸ்.கோபிகாந்தன், ஜே.திரோ ஜன்

**பெண**

என்.கௌஷிகா, என்.சுவீதனா.

**16வயதுப் பரிவு**

**ஆண்**

யோ.திவாகர், எம்.சிவதர்ஷன்.

**பெண்**

சி.சதுர்சிகா, பு.சுகனியா.

**18 வயதுப் பிரிவு**


**ஆண்**

எஸ்.சுலக்ஷன், ஜி.ஸ்ரனிஸ்.


**பெண்**

எஸ்.வித்தியாரணி, வீ.ரி.எஸ். ராதிகா. (18)

# உலக விளையாட்டு வலம்




நாஸ்கார் நெக்ஸ்ரெல் வெற்றிக் கிண்ணத்திற்கான கார் பந்தயப் போட் டியில் ரேசிங் டொஜ் அணியின் ரயன் நியூமன் முன்னணியில் வருவதை படத்தில் காண்கிறீர்கள்.



இந்திய -பாகிஸ்தான் டெஸ்ட் தொட ரில் பாகிஸ்தான் அணியின் விக் கெற்காப்பாளர் மெய்ன் கான் வீரேந்தர் ஷேவாக்கின் பிடி ஒன்றை எடுப்பதற்கு தாவுவதைப் படத்தில் காணலாம்.



அதிவேக ஸ்கேட்டிங் போட்டிகளுக் காகச் சீன வீராங்கனைகள் பயிற் சியில் ஈடுபடுகின்றனர். இவர்கள் எதிர்வரும் ஒலிம்பிக் போட்டிகளுக் காகத் தங்களைத் தயார் செய்து வருகின்றார்கள்.



கிறாவ்ட் நபிஸ்கோ வெற்றிக் கிண் ணத்தின் இறுதிப் போட்டியில் பங்குபெறும் அமெரிக்க கோல்வ் வீராங்கனை மிச்சல் வீ.



150வது கேம்பிறிஜ் படகுப் போட்டி யில் வெற்றிபெற்ற கேம்பிறிஜ் கொக்ஸ் அணியின் தலைவர் கெனிம் றிச்சாட் சன் அவ் அணியின் வீரர்களால் வெற்றி ஆரவாரம் செய்யப்பட்டு தேம்ஸ் நதியில் தூக்கி எறியப்படு வதைப் படத்தில் காண்கிறீர்கள்.




மக்பீஸ் றக்பி அணியின் அந்தனி றொக்கா கொலிங்வூட் உதைபந் தாட்ட மைதானத்தில் பயிற்சியில் ஈடுபடுகிறார். மெல்பேணில் நடை பெறவிருக்கும் உலக றக்பி முன் னோடிப் போட்டிகளுக்கான பயிற் சியில் இவர் ஈடுபடுவது குறிப்பிடத் தக்கது.



1998ல் இலங்கை அணியின் முன் னாள் தலைவர் அர்ஜுன ரணதுங் கவும் முத்தையா முரளிதரனும் நடுவர் எமர்சனுடன் முரளிதரனின் பந்துவீச்சுத் தொடர்பாக வாக்கு வாதத்தில் ஈடுபடுவதைப் படத்தில் காணலாம்.



ஆண்களுக்கான ஐஸ்ஹொக்கிப் போட்டிகளில் அபாரமாக விளை யாடி அமெரிக்க அணிக்கு வெற்றி வாய்ப்பை நிச்சயம் செய்த அமெ ரிக்க வீரர் டொனால்ட் தனது தலைக் கவசத்தைக் கழற்றி ரசிகர்களின் கரகோஷத்தை ஏற்றுக் கொள்வ தைப் படத்தில் காணலாம்.



பாகிஸ்தானுக்கு எதிரான முதலா வது டெஸ்ட் போட்டியில் முச்சதங் களைக் குவித்து சாதனை புரிந்த இந்திய வீரர் வீரேந்தர் ஷேவாக். இந்தச் சாதனையை இந்தியக் கிரிக்கெற் வரலாற்றில் முதன் முத லாக ஏற்படுத்திய பெருமையும் இவரைச் சார்கிறது. இவரோடு இந் தியாவின் நட்சத்திர ஆட்டக்காரர் சச்சின டெண்டுல்கரும் மிக நிதான மாக விளையாடி ஒரு சதத்தைப் பூர்த்தி செய்தார்.



எதிர்வரும ஒலிம்பிக் ரெனிஸ் போட் டிகளில் தான் பங்குபெறுவதை செரினா வில்லியம்ஸ் பத்திரிகை யாளர்களிடம் உறுதிசெய்தார்.

# இன்று ஒரு தகவல்

## மூச்சுப் பயிற்சி

ஒருவர் வாழ்கிறார் என்று சொல்வதற்கும் "ஏதோ இருக்கிறார்" என்று சொல்வதற்கும் வித்தியாசம் உள்ளது. வாழ்கிறார் என்றால் தனது உலகியல் கடமைகளையெல்லாம் ஒழுங்காகச் செய்கிறார் என்று அர்த்தம். ஏதோ இருக்கிறார் என்றால் மூச்சுவிட்டுக் கொண்டிருக்கிறார் என்று அர்த்தம். ஆனாலும் மூச்சு விடுவதைப் பொறுத்துத்தான் வாழ்நாள் நிர்ணயிக்கப்படுகிறது.

குறைவாக மூச்சு விடுபவர்கள் நீண்ட நாளைக்கு இருப்பார்கள். விரைவாக மூச்சு விடுபவர்கள் விரைவில் போய்ச் சேர்ந்து விடுவார்கள். மனிதன் ஒரு நிமிடத்திற்கு 12முறை மூச்சு விடுகிறான். அவனது சராசரி வாழ்நாள் 100 வருடம். குதிரை ஒரு நிமிடத்திற்கு 16முறை மூச்சு விடுகிறதாம். 25 வருடங்களுக்கு மேல் இருப்பதில்லையாம். இதுவே இப்படியென்றால் ஒரு நிமிடத்திற்கு 34முறை மூச்சுவிடும் புறாவின் நிலை எப்படியிருக்கும் என்று பார்த்துக் கொள்ளுங்கள். ஆமை ஒரு நிமிடத்திற்கு 4முறை மூச்சுவிடுகிறது. அதன் வாழ்நாள் 500 ஆண்டுகள். தேரை ஒரு நிமிடத்திற்கு 2 முறை மூச்சு விடுகிறது. அதன் வாழ்நாள் 2 ஆயிரம் வருடம் என்கின்றனர்.

நாம் எல்லோரும் மூச்சுப்பயிற்சி செய்தால் நீண்டகாலம் நன்கு வாழலாம். சித்தர்கள் இந்த மூச்சுப்பயிற்சி பற்றி நிறையச் சொல்லியிருக்கின்றனர். தொடர்ந்து மூச்சுப்பயிற்சி செய்துகொண்டு வந்தால் இரத்த அழுத்த நோய் வராதாம். ஆஸ்துமா வராது. ஞாபக சக்தி பெருகும். முகத்தில் களையும் ஒளியும் உண்டாகும். இரத்தம் சுத்தமாகும். நரை திரை உண்டாகாது. மூளையும் நுரையீரலும் வலிவடையும். கள் குடிப்பதனால் உண்டாகக்கூடிய களிப்பை இந்த மூச்சுப் பயிற்சி தரும் என்கிறார் திருமூலர்.

**"புள்ளினும் மிக்க புரவியை மேற்கொண்டால்**
**கள்ளுண்ண வேண்டா; தானே களிதரும்**
**துள்ளி நடப்பிக்கும்; சோம்பு தவிர்ப்பிக்கும்**
**உள்ளது சொன்னோம் உணர்வுடையோர்க்கே" -**

திருமந்திரம்

பறவையை விட வேகமுடைய குதிரையாகிய உயிர்வளி அதை மேற்கொள்ளுதல் என்றால் அதை அடக்கி நடத்துதல்.

சரி இந்த மூச்சுப் பயிற்சியை நாம் எப்படிச் செய்யலாம். மேல்நோக்கி அதாவது மல்லாந்து படுக்கவேண்டும். மூச்சை மூக்கால் இழுத்து கொஞ்சநேரம் அடக்கி வைத்திருந்து பின்பு முன்னர் இழுத்தது போலவே விடவேண்டும்.

இப்படிப்படுத்துக்கொண்டு மூச்சுப் பை நிறையும்படியாக மூச்சுவிட்டுப் பழகிய பின்பு நின்று கொண்டோ நடந்துகொண்டோ பழகலாம். சிறிது நாளில் நாம் எங்கிருந்தாலும் பயணம் செய்துகொண்டிருந்தாலும் நம்மை அறியாமல் நீண்ட மூச்சு இழுத்து விடக்கூடிய பழக்கம் ஏற்படும். இது மிகவும் சுலபமான பயிற்சி. பழக்கத்தில் கொண்டு வந்துவிட்டால் மிகவும் நல்லது. காலையில் எழுந்தவுடன் வாயைக் கழுவிவிட்டு வெறும் வயிற்றில் மூன்று குவளை காய்ச்சி ஆறிய நீர் குடிக்க வேண்டியது. அதன்பின் 20 நிமிடத்திற்குக் குறையாமல் மூச்சுப் பயிற்சி செய்யலாம் என்று அனுபவப்பட்டவர்கள் கூறுகின்றனர். காலையில் சந்தர்ப்பம் இல்லாவிட்டால் சிற்றுண்டி சாப்பிட்டு இரண்டு மணித்தியாலம் கழித்து அல்லது உணவு உண்ட மூன்று மணித்தியாலம் மூச்சுப் பயிற்சி செய்யலாமாம்.

இதுவரையில் கூறியது சாதாரணமான சுலபமான மூச்சுப்பயிற்சி. இதைத்தவிர பிராணாயாமம் போன்ற சில சிறப்பான பயிற்சிகளும் உண்டு. அதையும் கற்றுக் கொண்டு செய்யலாம். மனம் வைத்து இவற்றைச் செய்ய ஆரம்பித்தால் மருந்துச் செலவு இருக்காது.

ஒரு ஆள் "அவசரமாக ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டும் அதற்கு என்ன வழி ? " என்றான். "வேகமாக நடந்துபோ இந்தத் தெருக்கோடியில் தான் ஆஸ்பத்திரி" என்றனர். அதைவிடச் சீக்கிரம் போகவேண்டும் என்றான். அப்படியாயின் சைக்கிளில் செல்லலாம்" என்றனர். " அதைவிட வேகமாகப்போகவேண்டும்" என்றான். "அப்படியென்றால் காரில் போகலாம்"என்றனர். அவன் "அதைவிட வேகமாகப் போகவேண்டும் என்றான். அப்படியென்றால் அதோ எதிரில் நிற்கிறதே ஒரு வெறிநாய். அதைக் கல்லால் அடி துரத்த ஆரம்பிக்கும் நீ சீக்கிரம் போய்ச் சேர்ந்து விடலாம்" என்றனர்.

தென்கச்சி கோ: சுவாமிநாதன்

# வடபகுதிக் கடலில் அத்துமீறிப் புகுந்த 39 இந்திய மீனவர்கள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆண்டில் வெவ்வேறு காலப்பகுதிகளில் வடபகுதிக் கடலில், தலைமைப் படகோட்டிகளாக விருந்து அத்துமீறிப் பிரவேசித்து மீன் பிடித்ததாக கைது செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 39 மீனவர்களுக்கெதிரான வழக்குகள் நேற்று முன்தினம் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி. எஸ். வரதராஜா முன்னிலையில் எடுக்கப்பட்டபோது சந்தேக நபர்கள் தாங்கள் குற்றவாளிகள் என்பதை ஒப்புக்கொண்டுள்ளனர்.

எதிரிகளுக்காக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு தனது சமர்ப்பணத்தில், கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் சிறையில் இருப்பதனால் அவர்களது குடும்பங்கள் வறுமையால் வாடுவதாகவும், அவர்கள் தவறுதலாகவே இலங்கைக் கடல் எல்லைக்குள் பிரவேசிக்க நேர்ந்தது என்றும் எதிர்காலத்தில் இப்படியான தவறுகளை செய்யமாட்டார்கள் என்றும் அவர்களை கருணை கூர்ந்து விடுதலை செய்யுமாறு நீதிமன்றத்தை வேண்டுவதாகவும் தெரிவித்தார்.

அரச சட்டவாதி செல்வி. சுகந்தி கந்தசாமி தனது வாதத்தில், எமது நாட்டுக் கடல் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசிப்பது மிகவும் பாரதூரமான குற்றமாகும். இக் குற்றச்சாட்டுக்கு 15 இலட்சம் ரூபா குற்றப்பணம் விதிக்கலாம். எனவே, இக்குற்றச்சாட்டை கருத்திற்கொண்டு உரிய தண்டனை விதிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதிபதி பின்வருமாறு தீர்ப்பளித்தார்.

எதிரிகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்ததுடன், தண்டப்பணம் செலுத்தத் தவறினால் 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 5 வருட கடுழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும், இவர்களால் பாவிக்கப்பட்ட விசைப் படகுகள் , வலைகள், உபகரணங்கள் என்பன பறிமுதல் செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

மேலும் குறித்த மீனவர்களின் கைவிரல் அடையாளங்களை பதிவு செய்யுமாறும் பொலிஸாருக்கு கட்டளையிட்டார். (உ-3)

# தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பீடாதிபதிகளுடன் கலந்துரையாடல்

## யாழ். பல்கலையில் இடம்பெற்றது

(யாழ்ப்பாணம்)

தமிழீழ நீதி நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் பரா யாழ். பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக பீடாதிபதிகள் ,விரிவுரையாளர்களுடன் நேற்று முன்தினம் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

பொருளியல் துறைத்தலைவர் சிவநாதன் தலைமையில் நேற்று முன்தினம் 10.00 மணியளவில் நடைபெற்ற இந் நிகழ்வில் பரா கருத்துத் தெரிவிக்கையில்,

விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத்திட்டத்தின் மூலம் நாடு இரண்டாகப் பிளவுபடப் போகிறது.

நாட்டுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது எனக் காரணம் கூறி முதலில் மூன்று அமைச்சுக்களை ஜனாதிபதி பறித்தார். பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலையும் அறிவித்தார்.

சென்ற தேர்தலில் மறைமுகமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்த நாம். இத் தேர்தலில் பகிரங்கமாக ஆதரிக்கவேண்டிய தேவை வந்துள்ளது. எமது தேசியத் தலைவர், பிரதம மந்திரி ஆகியோர் சர்வதேச மத்தியஸ்தத்தின் முன் கையொப்பமிட்ட புரிந்துணர்வு ஒப்பந்தமானது இரண்டு வருட காலம் நடைமுறையில் இருக்கிறது. இக்காலத்தில் நாம் சமாதானத்திற்கு எதிரானவர்கள் இல்லை என்பதை நிரூபித்தோம். அத்துடன் சர்வதேச ஆதரவுடன் ஒரு இடைக்கால தன்னாட்சி அதிகார வரைபுத்திட்டம் ஒன்றையும் எமது சட்ட ஆலோசகர்களின் உதவியுடனும் சர்வதேச சட்ட அரசியல் ஆலோசகர்களின் உதவியுடனும் தயாரித்து ஸ்ரீலங்கா அரசின் பரிசீலனைக்குக் கொடுத்துள்ளோம்.

இன்று சர்வதேச நாடுகளுக்கும் சிங்கள அரசியல் கட்சிகளுக்கும் நாம் முன்வைத்துள்ள தீர்வுத் திட்டத்தை எமது மக்கள் ஏகோபித்து ஆதரிக்கின்றனர் என்ற கருத்தை இத்தேர்தல் மூலம் நிரூபிக்க வேண்டும். தென்னிலங்கையில் எந்தக் கட்சி ஆட்சி அமைப்பதற்கும் நாம் கூட்டமைப்பை ஆதரிக்கவில்லை. எமது கோரிக்கைகளையும் . இலட்சியத்தையும் அடைவதற்கே இத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரிக்கின்றோம் என்றார்.

இன்று யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டு.- அம்பாறை ஆகிய பகுதிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றிக்கு நாம் வேலை செய்வதாகவும், கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பில் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான் பிரதேச வேறுபாடு தலை தூக்கியது பற்றியும் விரிவுரையாளர்கள் கேட்டபோது, இது தனிப்பட்ட கருணா என்பவரால் ஏற்படுத்தப்பட்ட நடவடிக்கை. தன்னுடைய பலவீனங்களை மறைக்க மேற்கொண்ட நடவடிக்கையே இது. இதற்கு எமது தமைப்பீடம் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொண்டு அவரை எமது அமைப்பில் இருந்து வெளியேற்றியது. இச் சம்பவம் எமது போராட்டத்தை எந்தவிதத்திலும் பாதிக்காது. இவ்வாறு பரா தெரிவித்தார். (த)

# இராசி பலன்

01.04. 2004

(பங்குனி19, வியாழக்கிழமை)

ஏகாதசி முன்னிரவு 7.52மணி வரை
ஆயிலியம் முன்னிரவு 7.14 மணி வரை
இராகுகாலம் 1.41-3.11 மணிவரை
சுபநேரம் 7.41-9.11 மணிவரை
ஏகாதசி விரதம்

**மேடம்**
தாய்வழி உறவு, மனச்சஞ்சலம், முயற்சி தாமதம், ரோகநிலை.

**இடபம்**
போசன நன்மை, பிரயாண சுகம், சகோதரர் உதவி, தனலாபம்.

**மிதுனம்**
மாதர் நட்பு, வீண் விவாதம், எடுத்த காரியம் தாமதம், தனவிரயம்.

**கடகம்**
தெய்வ சிந்தை, வாக்கு மேன்மை, முயற்சி கைகூடும், தேகநலன்.

**சிங்கம**
காரிய தாமதம், சுப செலவு, உடல்நலக் குறைவு, சிந்தனை மிகுதி.

**கன்னி**
இஷ்ட சித்தி, மனமகிழ்ச்சி, பிரயாணம், பொருள் சேர்க்கை.

**துலாம்**
புதிய முயற்சி, நல்ல செய்தி, நண்பர்கள் சந்திப்பு, கீர்த்தி.

**விருச்சிகம்**
கட்டுப்பாடு, பித்த ரோகம், முயற்சி தாமதம், அதிக செலவு.

**தனுசு**
வாகன் பயம், காரிய தடங்கல், உடல் நலக்குறைவு, நண்பர்கள் விரோதம்.

**மகரம்**
போசன சுகம், அபுர்வ சந்திப்பு, முயற்சி கைகூடும், பொருள் சேர்க்கை.

**கும்பம்**
ஆரோக்கியம், நல்ல வரவேற்பு, எடுத்த காரியம் கைகூடும், சத்துரு ஜெயம்.

**மீனம்**
போசன சுகம், காரிய தாமதம், மாதர் நட்பு, இடமாற்றம்.

**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**

- வளவன்.

# மட்டு.வேட்பாளர்களின் பாதுகாப்புக்குப்பலமான ஏற்பாடு

(மட்டக்களப்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கிழக்குப் பிராந்திய பொலிஸ்மா அதிபர் எடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வேட்பாளர் ராஜன் சத்தியமூர்த்தி துப்பாக்கி இளைஞர்களினால் சுடப்பட்ட சம்பவத்தை அடுத்தே இப்பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடும் சகல வேட்பாளர்களின் பாதுகாப்புக் குறித்து ஆராயும் விசேட கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இக்கூட்டத்தில் விசேட அதிரடிப்படையின் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் எனப் பலதரப்பட்டோர் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து செயற்படுதவதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தனர். இதேவேளை, ராஜன் சத்தியமூர்த்தியின் படுகொலை தொடர்பாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லையாயினும் புலன்விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. (ம)

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்

- குறள்

வலம்புரி

## விடிந்தால் தேர்தல்

13 ஆவது பாராளுமன்றத்துக்கான தேர்தல் நாளை நடைபெறுகிறது. ஐந்து வருட ஆயுளைக் கொண்ட 12 ஆவது பாராளுமன்றம் இரண்டு வருடங்களோடு தனது ஆயுளை முடித்துக்கொள்ள, 13 ஆவது பாராளுமன்றத் தேர்தல் நாளை நடைபெறுகின்றது.

தேர்தல் பிரசாரங்கள் யாவும் ஓய்ந்து அப்பாடா என்று பெருமூச்சு விடும் அளவில் வேட்பாளர்களுக்கு ஓய்வு கிடைத்துள்ளது. வேட்பாளர்கள் முன்வைத்த கருத்துக்கள், கொள்கைகள் என்பவற்றால் குழம்பி இறுதியில் ஓர் தீர்மானத்திற்கு வாக்காளர்கள் வந்திருப்பார்கள். அந்தத் தீர்மானம் யாருக்கு வாக்களிப்பதென்பதற்கு முன்னதாக வாக்களிப்பதா? அல்லது வாக்களிக்காமல் விடுவதா ? என்பதாக இருக்கும்.

கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்ற தேர்தல் பிரசாரங்களின் பின்னரும் வாக்களிப்பதில்லை என்ற முடிவுகளை வாக்காளர்கள் எடுத்திருப்பார்களாயின் அஃது துரதிஷ்டவசமான முடிவுகளாகவே இருக்கும்.

எதுவாயினும் 13 ஆவது பாராளுமன்றத்துக்கான தேர்தல் விடிந்தால் என்ற முடிவில் எந்த மாற்றமும் இல்லை.யார் வாக்களித்தால் என்ன யார் வாக்களிக்காமல் விட்டால் என்ன தேர்தல் நடந்தேறுவதும், அந்தத் தேர்தல் மூலம் ஆட்சி அமைக்கப்படுவதும் உறுதி.

ஆனால், நடைபெறப்போகும் தேர்தல் எவ்வளவு தூரம் நேர்மையாக -நீதியாக நடைபெறும் என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

வாக்கு மோசடிகள், கள்ள வாக்குகள் என்பன இம்முறைத் தேர்தலில் மிகத்தாராளமாக நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் வேதனை என்னவெனில், வாக்களிக்க வேண்டியவர்கள் வாக்களிக்காமல் இருக்க, அவர்களின் வாக்குகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாகும்.

ஒவ்வொரு வாக்காளர்களும் பொறுப்போடு நடந்துகொண்டால்-தமக்குரித்தான வாக்குகளை சரியான முறையில் பயன்படுத்தினால் கள்ள வாக்கு என்ற மோசடி நடவடிக்கை ஓரளவேனும் கட்டுப்படுத்தப்படும். ஆனால், வாக்காளர்களில் பெரும்பாலானோர் ஏனோதானோ என்ற அசமந்தத்துடன் இருப்பதால், மோசடிகள் நடைபெறுவதற்கு வழிசமைக்கின்றது.

அதிலும் குறிப்பாக பெண் வாக்காளர்கள் வாக்களிப்பில் கலந்துகொள்வது மிகச் சொற்பமாகவே உள்ளது. இதனால், ஒரு குறிப்பிட்ட வகுதியினரின் விருப்பு அல்லது முறைகேடான வாக்குகள் ஆட்சியாளர்களை தீர்மானித்துவிடுகிறது. இதன்காரணமாக நாட்டு மக்கள் ஒட்டுமொத்தமான துன்பங்களை அனுபவிக்க நேரிடுகின்றது.

முறைகேடான வாக்குகள், மோசடிகள் என்பவற்றின் மூலமாக ஆட்சி அதிகாரங்களை கைப்பற்றுபவர்களிடம் நீதியான ஆட்சியை மக்கள் எதிர்பார்ப்பார்களேயானால் அஃது மக்களின் தவறேயன்றி, ஆட்சியாளர்களின் தவறாக இருக்க முடியாது.

எனவே நாளைய விடியலில் நடைபெறப்போகும் தேர்தல் ஓரளவேனும் நீதியாக-நேர்மையாக-வன்செயல் அற்ற முறையில் நடைபெறுவதற்கு வாக்காளர்கள் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

அதேவேளை, தேர்தல் கடமைகளில் பணியாற்றுபவர்களும் தமது பணியை செவ்வனே செய்து முடிப்பதற்கு திடசங்கற்பம் பூணவேண்டும். நமக்கேன் வீண்வம்பு என்ற எண்ணம் தேர்தல பணியாளரிடம் இருக்குமாயின், நேர்மையான தேர்தலை நடத்துவது முடியாத காரியமாகும். எனவே தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் ஏனோதானோ என்ற மனப்பாங்குடன் செயற்படாமல், வாக்களிப்பு நீதியான முறையில் நடைபெறுவதை உறுதி செய்தல் வேண்டும். முறைகேடான வாக்களிப்பு என்று தெரிந்தும் முகத்தைத் திருப்பிக் கொண்டு, காரியம் நடந்தேற அனுமதிப்பது மிகப் பெரும் தவறாகும்.

அதேபோல், வாக்கெடுப்பு முடிவுற்று வாக்குகள் எண்ணும் பணியில் ஈடுபடுகின்ற பணியாளர்களும் நேர்மையுடன்-பொறுப்புடன் செயற்படுவது அவசியமாகும்.

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் வாக்கெண்ணலில் தவறு இருப்பதாகப் புகார் தெரிவித்து 2வது தடவை எண்ணலை நடத்தியபோது அந்த எண்ணலின் முடிவுகள் முன்னைய எண்ணலின் முடிவுகளோடு சமப்படாமல் இருந்த நிகழ்வுகள் பல நடந்துள்ளன. ஆகவே, வாக்குகளை எண்ணுகின்றவர்களும் மிக நிதானமாக தமது பணியை செய்யும் போதே உண்மையான முடிவுகள் வெளியாக முடியும்.

# வாக்களிக்கும் உரிமையைத் தடுப்பவர் மீது பொலிஸார் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## இலங்கை மனித உரிமைகள் ஆ.கு. அறிக்கை

(கொழும்பு)

வாக்களிக்கும் உரிமையைத் தடுப்பதில் ஈடுபடுபவர்கள் மீது பொலிஸார் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். மேற்படி நடைமுறையைக் கைக்கொள்ளாவிட்டால் அது அரசியலமைப்பின் 12 ஆம் 14 (1)ஆம் பிரிவுகளை மீறும் செயலாகும்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும், 1978ஆம் ஆண்டின் இலங்கை அரசியல் யாப்பின் படியும், யாப்புடன் இணைத்துக் கொள்ளப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் விழுமியங்களின்படி வகுக்கப்பட்ட வழிகாட்டல்களினை அனுசரித்தும், கடைப் பிடித்தும், பிரஜைகளின் சுதந்திரமான வாக்களிக்கும் உரிமைகளையும் சுதந்திரமான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடவும் சுதந்திரமானதும் நேர்மையானதுமான தேர்தல்களில் ஈடுபடுவதனையும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அங்கீகரிக்கின்றது. சர்வதேச மனித உரிமைகள் விழுமியங்களின் வழிகாட்டல்களின்படி தேர்தலுக்கு முன்பும், தேர்தலின் போதும், தேர்தலுக்குப் பின் உடனடியாக பொலிஸார் நடந்து கைக்கொள்ள வேண்டிய, பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை பற்றியும் கூறப்பட்டுள்ளது.

தேர்தலுக்கு முன்னைய முறைப்பாடுகள் தேர்தல் தினத்தன்றைய வன்முறைகள், தேர்தலுக்குப் பிந்திய உடனடி வன்முறைகள் பற்றி பொலிஸார் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நன்கு விசாரிக்கப்பட வேண்டும். இலங்கை அரசியலமைப்புச் சட்டம் 12ஆம் பிரிவின்படி சட்டத்தின் முன் யாவரும் சமன். சட்டத்தின் கீழ் யாவருக்கும் சமமான பாதுகாப்புரிமை உண்டு. முறைப்பாடுகளின்படி பொலிஸாரின் சில செயற்பாடுகளும், சில செயற்பாடுகளை செய்யாது விடுவதும் அடிப்படை மனித உரிமை மீறலாகும்.

★ முறைப்பாடுகளின் மேல் பொலிஸாரின் நடவடிக்கைகள் பாரபட்சமின்றியும், அரசியல் செல்வாக்கினால் செய்யாது விடுவதும், அல்லது வேறு நியாயமற்ற காரணங்களினால் செய்யாது விடுவதும், அரசியலமைப்பின் 12வது பிரிவினை மீறும் செயலாகும்.

★ தேர்தல் செயற்பாடு சம்பந்தமான சட்டங்கள் சமமாக நிர்வகிக்கப்படவேண்டும், அரசியலமைப்புச் சட்டம் 12 (2) ஆம் பிரிவின்படி எல்லா அரசியல் கட்சிகளும், தனிப்பட்ட குழுமங்களும் சமமாக நடத்தப்பட வேண்டும். 12(2) கூறுவதாவது, எப்பிரஜைகளும் சாதியத்தின் அடிப்படையிலோ, சமயம், மொழி,சாதி, பால், அரசியல் வெளிப்பாடு, பிறந்த இடம் அல்லது வேறு ஏதாவது ஒரு காரணத்திற்காகவோ பாகுபாடு காட்டல் அரசியலமைப்பின் 12(2) ஆம் பிரிவை மீறும் செயலாகும்.

★ தேர்தல் கூட்டங்களை நடத்துவதற்கு ஒலிபரப்பு அனுமதி வழங்குவது விசேடமாக பாராளுமன்ற தேர்தல்கள் சட்டம் பிரிவு 68 (2) இன் படி வழங்கப்பட வேண்டும். இந்தக் கடப்பாட்டினை நிறைவேற்றாமல் விடுவது அரசியலமைப்பின் 12 ஆம் பிரிவினை மீறும் செயலாகும் .மீறுவதனால் அரசியல் வன்முறைகள் ஏற்படலாம்.

★ தேர்தல் காலங்களில் தேர்தல் ஊர்வலங்கள் சட்டப்படி நடத்தப்படலாம், ஊர்வலங்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்குவது, சமய காரணத்துடன் அல்லது வேறு விசேட காரணத்துடன் பின்னிப் பிணைந்து இருக்கலாம், உத்தரவாதமான பேச்சு சுதந்திரம், ஒன்று சேர்தல், இருக்குமிடங்களில் ஒன்று சேர்தல், இயங்குதல் என்பன அரசியலமைப்பின் 12 ஆம் 14 ஆம் பிரிவுக்குட்பட்டன.

★ துண்டுப்பிரசுரங்கள, சுவரொட்டிகள், அபேட்சகரின் படங்கள் , சின்னங்கள், கொடிகள், பதாதைகள் வெளியிடல், தேர்தல்கள் சட்டங்களின்படி அனுமதிக்கப்பட்டவையாகும. ஏதாவது ஒரு கட்சிக்கு அல்லது குழுமத்திற்கு விசேட சலுகை அல்லது உரிமை வழங்கப்படுவது அரசியலமைப்பின் 12 ஆம் 14(1) ஆம் பிரிவுகளை மீறும் செயலாகும்.

★ பொலிஸ் அலுவலர் வாக்களிப்பு நிலையங்களுக்கும் அதனுடன் சம்பந்தமான இடங்களுக்கும்மேலதிக கடுமையான பாதுகாப்பு வழங்க வேண்டும். இந்நாட்டின் தேர்தல் சட்டங்களுக்கு அமைவாக நேர்மையானதும் சுதந்திரமானதுமான தேர்தல் நடைபெறுவதற்கு எல்லாவிதமான முயற்சிகளும் எடுக்க வேண்டும்.

★ தேர்தல் சட்டங்கனை மீறும் நபர்கள் அல்லது கட்சிகள் மீது அவர்களது அந்தஸ்து அல்லது அதிகாரங்களை கவனத்தில் எடுக்காது சமமாக அமுல்படுத்தப்படல் வேண்டும். பொதுச் சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்துபவர்கள் அல்லது அதன் தேசத்திற்குக் காரணமாக விளங்குபவர்கள் மீது (உதாரணமாக அரச வாகனங்கள் அரச கட்டிடங்கள்)' பொலிஸாரினால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

★ தேர்தல்களின் பின் உடனடியான வன்முறைகளையும் தேர்தல் தொடர்பான வன்முறைகளையும் கட்டுப்படுத்துவதில் பொலிஸாருக்கு பெரும் பொறுப்பு உண்டு. வன்முறைகள் செயற்படுவதற்கு அரசியல் செல்வாக்கு காரணமாக இருந்ததை கடந்த கால வரலாற்று அனுபவங்களில் காணலாம். இது அடிப்படை உரிமை மீறும் செயலுக்கு வழிவகுக்கும். ஆகவே பொலிஸார் அடிப்படை உரிமைகளை மீறாத வகையில் சட்டத்திற்கமைவாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

★ வன்முறைகளை ஏற்படுத்துவதில் பொலிஸார் பங்காளியாகவோ, தயார்ப்படுத்துபவராகவோ, காரண கர்த்தாவாகவோ அல்லது ஒருதரப்பாகவோ இருக்கக் கூடாது . ஒருதிறத்தவரை அல்லது வன்செயலாளரை தரக் குறைவாக நடத்துதல், தண்டித்தல் ,இம்சித்தல் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றுள்ளது.

(உ-19)

## வடமராட்சி கிழக்கு மக்கள் வாக்களிக்க வசதியாக முகமாலையில் 8 சாவடிகள்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கிலுள்ள புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதியில் 8 வாக்கெடுப்பு நிலையங்களும முகமாலையில் தற்காலிக கொட்டகைகளில் திருத்தப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்களில் வாக்களிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

செம்பியன்பற்று அரசினர் தமிழ் கலவன்பாடசாலை, தாளையடி றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை, உடுத்துறை இந்து தமிழ்க் கலவன் பாடசாலை,உடுத்துறை மகாவித்தியாலயம், ஆழியவளை இலங்கை கிறிஸ்தவ ஆய தமிழ்க் கலவன் பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், கேவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியவாக்கெடுப்பு நிலையங்களுக்குப் பதிலாகவே முகமாலையில் தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டு வாக்களிப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

(உ-35)

## உரிய நேரத்துக்கு வாக்களிக்க செல்லுமாறு மக்களுக்கு அறிவுறுத்து

(கொழும்பு)

நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலின் போது வாக்காளர்கள் உரிய நேரத்துக்கு சென்று தமது வாக்குகளை அளிக்க வேண்டும் என்று பொலிஸ் தேர்தல் செயலகப் பணிப்பாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான காமினி நவரத்தின கேட்டுள்ளார்.

உரிய நேரத்தில் வாக்காளர்கள் வாக்களிக்கும் பட்சத்திலேயே, பொலிஸார் ஊழல்களைக் கண்டறிய சுலபமாக இருக்கும் .அத்துடன் வன்முறைகள இடம்பெறாமல் பாதுகாக்கவும் முடியும.

எனவே, நீதியானதும் நியாயமானதுமான தேர்தல் ஒன்றை நடாத்தி முடிப்பதற்கு வாக்காளர்கள் உரிய நேரத்திற்கு சென்று சென்று தமது வாக்குகளை அளிக்க வேண்டும்.

தேர்தல் தினத்தன்று விசேட பாதுக்காப்பு செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

வன்முறைச் சம்பங்கள் இடம்பெறலாம் எனச் சந்தேகிக்கப்படும் இடங்களில் பொலிஸாருடன் இராணுவத்தினரும் இணைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-60,10)

## சாயி அருளமுதம்

உங்களை இகழ்பவர்களிடமும் நீங்கள் பதிலாக அன்பு காட்ட வேண்டும். அதுவே நமது மதம் காட்டும் சிறந்த பண்பாடாகும். கடவுளின் அவதாரங்கள் அவ்வாறு நடந்து காட்டியுள்ளன. எல்லா ஜீவராசிகளிலும் இறைவன் வதிகிறார். அதனால் ஜீவனுக்கு செய்யப்படும் சேவைகள் யாவும் இறைவனுக்குச் செய்யப்படுபவையே.

நன்றி நாளாந்த நற்சிந்தனை

## தவக்கால சிந்தனை-36

இயேசுவின் வார்த்தைகள் வாழ்வளிக்கும் ஆற்றல் கொணடவை. எனவேதான், "யாரிடம் செல்வோம்" என்று புனித பேதுரு இயேசுவிடம் கூறினாா. இறைவனின் வாய்ச்சொல் ஓவ்வொன்றிலும் மனிதா் வாழ்கின்றனா் என்பது இயேசுவின் கூற்று. இங்கு ஆண்டவா் இயேசு குறிப்பிடும் வாழ்வு உடல் சாா்ந்த வாழ்க்கை அல்ல. மாறாக அவரது வாா்த்தைகள் விளக்கும் இறையாட்சியின் விழுமியங்களை நாம் வாழ்கின்ற போது இறை அனுபவம் பெற்று அவரை தந்தையாகக் காண்போம். அதன் அடிப்படையில மானிடத்தின் ஒவ்வொரு நபரையும் நம் சகோரத, சகோதரியாகவும், நண்பராகவும், உறவினராகவும் காண்பதற்கு நம் கண்கள் திறக்கபபடும. இந்தப் புதிய வாழ்வு வழிமுறைக்கு முட்டுக்கட்டையாக உள்ளவற்றை எதிா்த்துப் போராடி சகோதரததுவத்தையும், நீதியையும், உண்மையையும் வாழ்வதே நம் உயிா்ததுடிப்பாக மாறும். இதன் உச்சகட்டமே விடுதலை வாழ்வு.நம் சுய நலன்களிலிருந்து விடுதலை அடைந்து, பிறரையும் விடுதலை வாழ்வுக்கு இட்டுச் செல்வோம். இந்த வாழ்வை நமக்கு அருள்வது ஆண்டவரின் அருள் வாக்கு. இதன் பின்னணியில்தான் அது வாழ்வளிக்கும் ஒன்றாக மாறுகிறது. நறசெய்தியை வாசிப்பதைவிட அதை தியானித்து எளிய வாழ்வாக்க நமது முயற்சிகள் என்ன?

காவலன்

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட் களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
யாழ்.: 021 222 3916 0777 801038
கொழும்பு: T.P.: 2390128 Fax: 2399650 Mob: 0777 517019

# மட்டுநிலைமையை கண்டித்து மதகுருமார்கள் அறிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கின்ற அச்சுறுத்தல் நிலைமையைக் கண்டித்தும் அங்கு சுமுக நிலைமை ஏற்பட அனைவரும் முன்வர வேண்டும் என்று அழைப்பு விடுத்தும் மாவட்ட இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதத்தலைவர்கள் கூட்டறிக்கை மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர். அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

மட்டக்களப்பில் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் சம்பவங்கள் மிகுந்த அச்சத்தையும் கவலையையும் அளிக்கின்றது.

இவை மனித உயிரின் பெறுமதியை இல்லாது ஒழிப்பதுடன் மனிதரின் வாழ்வுரிமையையும் கேள்விக் குறியாக்கியுள்ளது.

பரபரப்பான தேர்தல் சூழலில் போட்டியிடும் வேட்பாளர்கள், அதிகாரிகள், கல்விமான்கள் மற்றும் அப்பாவிப் பொதுமக்கள் ஆகியோருக்கு எதிராக இடம்பெற்றுவரும் மிரட்டல்கள், கொலை முயற்சிகள், படுகொலைகள் போன்றவற்றை நாம் எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

மனிதப் பண்பற்ற, ஜனநாயக விரோதமான இந்நடவடிக்கைகள் நிலைமையை இன்னும் மோசமாக்கி மீண்டும் ஒரு யுத்த சூழலுக்குள் இப்பிரதேசத்தை தள்ளிவிடுமோ என்ற அச்சத்தையே மக்களிடம் ஏற்படுத்தியுள்ளது.

துப்பாக்கிச் சத்தங்களாலும், மரண ஓலங்களாலும் சுதந்திரத்தையோ, சமாதானத்தையோ நாம் அடைய முடியாது.

மதங்கள் அன்பையும், மனித நேயத்தையும், மன்னிப்பையுமே போதிக்கின்றன. எனவே வேற்றுமையிலும் ஒற்றுமை கண்டு, அனைவரும் அச்சமின்றியும், சுதந்திரமாகவும் வாழ்வதற்கு உதவ முன்வர வேண்டுமென்று அவ்வறிக்கையில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இவ்வறிக்கையில் மட்டக்களப்பு திருமலை ஆயர் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, இந்துமத முதல்வர் மகேஸ்வரக் குருக்கள், மௌலவி ஏ.ஜே.என். இலியாஸ், ஏ.ஆர்.மகேந்திரன் ஆகியோர் கையெப்பமிட்டுள்ளனர். (இ

## மட்டக்களப்பில்...

இது இவ்வாறு இருக்க மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக் கட்சி வேட்பாளர் ராஜன் சத்தியமூர்த்தி சுட்டுக் கொல்லப்பட்டமையை அடுத்தே கருணா குழுவின் இந் நடவடிக்கையை எடுத்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இதே வேளை மட்டக்களப்பில் இருந்து வடபகுதி தமிழ் மக்களை வெளியேறுமாறு வெளியான செய்தியை கருணா தரப்பு மறுத்துள்ளதாக பி.பி.சியின் தமிழோசை நேற்று செய்தி வெளியிட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-5)

## கருணாவின் அறி...

வெளியிடாக ஏற்றுக்கொள்ள வேண்டாம்.

இக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற நிதிப்பறிப்பு பொருட்கள் சூறையாடல், வீடுகள் சொத்துக்கள் அபகரிப்பு என்பன தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கத்தால் தேச விரோதச் செயல்களாக பிரகடனப்படுத்தப்படுகிறது.

மட்டு-அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் கருணா குழுவினால் விடுவிக்கப்படும் எவ்வித அறிவித்தல்களையும் பின்பற்ற வேண்டாம்.

இக்குழுவினால் நேரடியாகவும் வேறு பொது நிறுவனங்கள் என்ற பெயரிலும் வெளியிடப்படும் அச்சுறுத்தல்கள், அறிவுறுத்தல்களுக்கு நிர்ப்பந்தப்பட்டு காலம்காலமாக வாழ்ந்து வருகின்ற வாழ்விடங்களில் இருந்து வெளியேற வேண்டாம்.

இக்குழுவினின் அடாவடித்தனங்களுக்கு அஞ்சி மட்டு-அம்பாறையை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள உங்கள் அயலவர்கள் எவ்வித அச்சுறுத்தலும் இன்றி பாதுகாப்பாக வாழ உற்சாகமளியுங்கள

இவ்வாறு அந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(த)

## கருணாவின்...

தங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வாகனத்தின் பின் ஆசனத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 4 கைக் குண்டுகள் ரி-56ரக துப்பாக்கி ரவைகள் 72 அதற்கான மகசீன்கள் 7, ரீ-22ரக துப்பாக்கி ரவை 1 மற்றும் ரோச் லைட் சைனட், இலக்கத்தகடுகள், மின் இணைப்பு வயர் என்பனவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள இவர்கள் அபாயகரமான ஆயுதச் சட்டத்தின் கீழ் குற்றஞ் சுமத்தப்பட்டு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் பொலிசாரால் ஆஜர்படுத்தப்பட்ட போது எதிர்வரும் 14ம் திகதி வரை இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (ச)

## பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

தாவடி அம்பலவாண வேத விநாயகர் ஆலயத்தில் இன்று நடைபெறவிருந்த கைலாச வாகன வெள்ளோட்ட விழா தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாக சபை அறிவித்துள்ளது.

இவ்வெள்ளோட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ச)

## சங்கரி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்ற பொதுத்தேர்தலில் போட்டியிடும் சுயேச்சைக்குழு1 எக்காரணம் கொண்டும் தேர்தலில் இருந்து விலகமாட்டாது என அதன் முதன்மை வேட்பாளர் வீ.ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார். (ச)

## காரைநகரில் பிரார்த்தனை

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தியாகராசா மகேஸ்வரன் பூரண குணமடையவும் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் அமோக வெற்றி ஈட்டவும் வேண்டி விசேட அபிசேக ஆரோதனை ஒன்று நாளை காலை 6.30 மணிக்கு காரைநகர் வியாவில் ஹரிஹர புத்திரர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (ச)

ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்டன் யூனியன் பணப் பரிமாற்றம்
மூலம்
சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க
எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303 K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P.: 021 222 5392
Fax: 222 3214
E.mail : smskr@eureka.lk
(சி-7311)
சிவன் கோவில் வீதி, காரைநகர் T.P: 0602212472

## மின்னல் தாக்கியதில் உறவினர்கள் மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

மின்னல் தாக்கியதில் படுகாயமடைந்த உறவினர்களான மூவர் மயக்கமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் பெய்த மழையின் போது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

புதிய செம்மணி வீதி கல்வியங்காட்டைச் சேர்ந்த இவர்கள் ஒரே வீட்டில ஒன்றாக அமர்ந்து கதைத்துக்கொண்டிருந்த வேளை திடீரென மின்னல் தாக்கியதாகவும் இதன்போது வீட்டின் ஜன்னல் கதவுக் கண்ணாடிகளும் சேதமடைந்திருப்பதாக கூறப்படுகின்றது.

சதீஸ் கிரிதரன்(வயது11), தங்கமணி சுவீஸ்கர்(வயது09), நாகலிங்கம் ஜெயகதீஸ்(வயது29) ஆகிய மூவருமே மின்னல் தாக்கியதில் காயமடைந்தவர்களாவர். (உ-03)

## நாளை வாக்களிப்பு

(யாழ்ப்பாணம்)

பதின் மூன்றாவது பாராளுமன்ற பொதுத்தேர்தல் நாளை வெள்ளிக்கிழமை இடம் பெறவுள்ளது. 196 பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 24 அரசியல் கட்சிகளும், 200 சுயேச்சைக் குழுக்களும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன. 6 ஆயிரத்துக்கும் அதிகமான வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

நாளை காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை வாக்களிப்பு இடம்பெறும். வாக்காளர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகள் ஏற்கனவே ஏற்பாடாகியுள்ளது.

வாக்களிப்பு இடம்பெறும் நிலையங்களின் பாதுகாப்பை முன்னிட்டு இராணுவத்தினர் நேற்று மதியம் முதல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை குடாநாட்டின் முக்கிய வீதிகள், சந்திகளில் நேற்று முதல் படையினர் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளனர். (த)

## கண்ணீர் அஞ்சலி

பண்பாட்டியல் முதுகலை மாணி
கற்கைநெறியின் இணைப்பாளரும் எமது
பேராசானுமாகிய கலாநிதி என்.சண்முகலிங்கன்
அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி நகுலேஸ்வரி நாகலிங்கம்**

அவர்களின் மறைவுச் செய்தியறிந்து ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பண்பாட்டியல் முதுகலைமாணி
மாணவர்கள்

யாழ்.பல்கலைக் கழகம்

## விலை அதிகரிப்பு

பரிமளா ஸ்ரோர்ஸ் தயாரிப்பான V.S.P நல்லெண்ணெய் 01-04-2004 இலிருந்து 20 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்

குறிப்பு:- எள்ளின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதனால் நல்லெண்ணெயின் விலையை அடிக்கடி அதிகரிக்க வேண்டிய சூழ் நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு மிக மனவருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

T.P:2222785

பரிமளா ஸ்ரோர்ஸ்
26A மானிப்பாய் வீதி
யாழ்ப்பாணம்

(8475)

## மரண அறிவித்தல்

### திருமதி நகுலேஸ்வரி நாகலிங்கம்



யாழ்ப்பாணம், மயிலிட்டி தெற்கு, கட்டுவனைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலேஸ்வரி நாகலிங்கம் அவர்கள் நேற்று (31.03.2004) புதன்கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற புகழ்பூத்த மரபுவழி வைத்தியர் பரிகாரியார் நாகமுத்து அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், அமரரான ஆசிரியர் நாகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், கலாநிதி சண்முகலிங்கன் (பேராசிரியர் சமூகவியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்), வைத்தியக்லாநிதி நாகேஸ்வரி (உப அதிப இலங்கா சித்த ஆயுள் வேதக் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரி பாசமிகு தாயாரும், கௌரி (ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி) அவர்களின் பாசமிகு மாமியாரும், அமரர்களான குணரெத்தினம், விசாலாட்சி, சடாட்சரகுமரன், பரமேஸ்வரி, மகாலஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.04.2004) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், மாணவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கந்தன் அருள்,
அம்பலவாணர் பாதை,
திருநெல்வேலி.

தகவல்:
கலாநிதி என். சண்முகலிங்கன்

இன்று மூன்றாவது நாளாக அரங்கேறுகின்றது

## திருமறைக் கலாமன்றம்

தயாரித்து வழங்கும்
தவக்கால ஆற்றுகை

## காவிய நாயகன்

(திருப்பாடுகளின் காட்சி)
மார்ச் 30,31, ஏப்ரல் 01,03,04-2004
(செவ்வாய், புதன், வியாழன், சனி, ஞாயிறு)
(5 நாள்களுக்கு)

மனிதம் எமது தேடல்
மனிதம் எமது பாடல்
மன்ற அரங்கில்
மாலை 7.00 மணி

பார்வையாளர்கள் ஆசனங்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்
அன்பளிப்பு : 30.00

மனிதத்துவத்தின் தேடலுக்கான கல்வாரிப் பயணத்தில் இணைந்திட
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

திருமறைக் கலாமன்றம்

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
T.P/Fax 021-222 2393
E-mail : cpajaffna@sltnet.lk
Website : www.cpateam.org

(சி-7475)

இப்பத்திரிகை வலம்புரி அச். கோ. ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.04.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.